DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1351 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 25, 2022

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# உக்ரைன் மீதான ரஸ்யாவின் படையெடுப்பானது உலக நாடுகள் வகுத்த கட்டமைப்பை மீறுகின்றது என்கிறார் கனடியப் பிரதமர்



தற்போது இடம்பெற்று வரும் உக்ரைன் மீதான ரஸ்யாவின் படையெடுப்பானது உலக நாடுகள் தங்களுக்குள் வகுத்துக் கொண்ட ஒழுங்கான கட்டமைப்பை மீறும் செயலாக தான் கருதுவதாகவும் இது உலகிறகு உரு கடுமையான அச்சுறுத்தல் எனவும் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் ஒட்டாவாவில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

# உக்ரைன் மீது மோசனமான தாக்குதல்களை நடத்தும் புட்டின் இனிமேல் உலக அரங்கில் தனிமைப்படுத்தப்படுவர் என்கிறார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன்



உக்ரைன் மீது திட்டமிட்டு தாக்குதலை நடத்தியுள்ள ரஷ்யா மற்றும் ரஷ்யா தேசத்தின் அதிபர் விளாதிமிர் புட்டின், இனிமேல் உலக அரங்கில் தனிமைப்படுத்தப்படுவர் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பகிரங்க அறிவிப்பொன்றினை வெளியிட்டுள்ளார். உக்ரைன் எல்லைகளில் படைகளை குவித்து கடந்த ஒரு மாத காலமாக எச்சரித்து வந்த ரஷ்யா, நேற்று முன்தினம் அதிகாலையில் உக்ரைன் மீது வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி என மும்முனை தாக்குதலை நடத்தி போரை தொடங்கியது. இந்த தாக்குதல் தொடர்பாக வெள்ளை மாளிகையில் நடைபெற்ற பத்திரிகையாளர்களின் சந்திப்பில் பைடன் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார். இந்நிலையில், இதற்கு உலக நாடுகள் பல கடும் எதிர்ப்பினை வெளியிட்டு வரும் நிலையில், ரஸ்யாவிற்கு எதிராக அமெரிக்கா பகிரங்க அறிவிப்பொன்றினை வெளியிட்டுள்ளது.

*(தொடர்ச்சி உள்ளே 12ம் பக்கத்தில்)*

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ஸ்காபுறோவில் Taste of Madurai
உணவகத்தின் திறப்பு விழா SPECIAL
மதுரை கில்லிப் பரோட்டா – 2 $ 9.99 மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு 416-332-8000
2ம் பக்கம் உள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
North York, Scarborough & Brampton.
gta credit
Direct Tamil Line (416) 489-2000
Visit: www.GtaCredit.Com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX REALTRON BLUE FORCE
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

என்றுமே மாறாத மதுரைச் சுவையுடன் உணவு படைக்கின்றோம்







# Taste of MADURAI

Taste Of Madurai

Telephone: (416) 332-8000

திறப்பு விழாவையொட்டி விசேட விலைகளில்
சைவ, அசைவ உணவுகளைப் ஆடர் செய்து வாங்கிச் செல்லுங்கள்



திறப்பு விழா ஸ்பெஷல்

Madurai Killi Parotta (2 Pcs) $9.99

மேலும், நாவுக்கு விருந்தாகும் பல வகை உணவுகள்: தோசை வகைகள், பரோட்டா வகைகள்
அத்துடன் மதுரைச் சாப்பாடு பல கறிகளுடன், சூப் வகைகள், இன்னும் பல...


AVAILABLE
DOORDASH
Uber Eats
SKIP THE DISHES










3500 McNicoll Ave. Unit-7
Scarborough, ON
(Markham / McNicoll)

Telephone: (416) 332-8000
Email: mahendran1980@hotmail.com

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN: 416-894-6244

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415


### சாஸ்திரம்

மதுரை மீனாட்சி துணை
கடந்த 40 வருடத்திற்கு மேல் அனுபவமிக்க நந்தி வாக்கிய ஓலை சாஸ்திரம்
பிறந்த திகதி, வருடம், மாதம், நேரம் சொன்னால் போதும் நடக்கப்போவதை மிக துள்ளியமாக கணித்து சொல்லப்படும்.
தொடர்புகளுக்கு: கோ. காசிலிங்கம்
437-925-5643

### House for Rent

Brimely/ Eglinton சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றின் மேல்த் தளம் தனியாக வாடகைக்கு உண்டு. 3 படுக்கை அறைகள். 2 குளியல் அறைகள் அத்துடன் Washer, Dryer ஆகியன தனியாக உள்ளன. 2 Car Parking வழங்கப்படும்.
கடைகள். பாடசாலை பஸ் வசதி, வங்கிகள் ஆகியன மிக அருகில்.
விபரங்களுக்கு:
647-981-1997

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.



Our secure online application is easy to complete, just go to gopal@driveautogroup.ca
Or call Gopal Pillai at: (647) 763-0210

brimell

### ATSIN LAW சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce
Real Estate
- residential purchase, sale & refinance transactions
Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

SAROJINI SINIVASAN
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Pizza கடையொன்றில் வேலை வாய்ப்பு

பிக்கறிங் நகரத்தில் அமைந்துள்ள Pizza கடையொன்றில்:
Kitchen Helper, Pizza Maker, Cashier ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.
அனுபவும் ஆர்வமும் உள்ளவர்கள் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு:
416 722 6557

### Help Wanted

Richmond Hill நகரத்தில் வாரத்தில் இரண்டு தடவைகள் ஒருவருக்கு தமிழர் உணவை விநியோகம் செய்வதற்கு உடனடியாக ஆள் தேவை. வாரத்திற்கு கட்டணமாக 100 டாலர்கள் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு Frank என்பவரை அழைக்க வேண்டிய இலக்கம்:
416-543-9349

### நேரலை வீடியோ ஒளிபரப்பு சேவை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்திலும் கியுபெக் மாகாணத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறும் சுப வைபவங்கள் மற்றும் இறுதிக்கிரிகையகள் ஆகியவற்றை நேரடியாக வீடியோ ஒளிப்பதிவு செய்வது மாத்திரமன்றி. அந்த நிகழ்வுகளை நேரடியாக முகநூல் மற்றும் இணையத் தளங்களில் நேரலையாக ஒளிபரப்பவும் எம்மை அழையுங்கள்.
குறைந்த கட்டணமே அறவிடப்படும்
அழையுங்கள்
சிவா 647 891 7725

உதயன் கதிரோட்டம்

# நோய்த் தொற்றின் அபாயம் ஓயாத நிலையில் போரின் புகைச்சல் கசக்கிறது

உலகின் பெருநாடு ஒன்று சிறிய நாடொன்றை ஆக்கிரமித்து அநியாய உயிர்ப் பலிகளை கொண்டாடத் தொடங்கியுள்ளது. "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்று உலக நாடுகளில் சுரண்டல் நீங்கி உழைப்பவர்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்று முழங்கிய அந்த முழுமையான தேசம் இன்று வளங்கள் நிறைந்த அயல் நாடு ஒன்றை சின்னாப்பின்னமாக்கி வருகின்றது

ஆமாம்! ரஸ்ாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் நிலவி வந்த முறுகல் நேற்று முன்தினம் கடும் மோதலாக உருவெடுத்து உலகின் கவனத்தை தம் பக்கம் இழுத்துள்ளது.. இவ்வாறானதொரு ஆயுத மோதல் ஆரம்பமாவதைத் தவிர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலகின் பல நாடுகளும் கடந்த சில வாரங்களாகத் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வந்தன. ஐ.நா பாதுகாப்புச் சபை கூட இவ்விடயம் தொடர்பில் இவ்வாரத்தில் இரண்டு தடவைகள் கூடி கலந்துரையாடிய போதிலும், கடும் மோதல் உருவாகியுள்ளது. மக்கள் உக்ரைன் தலைநகரை விட்டு கடந்த சில தினங்களாக வெளியேறி வருகின்றனர். கொரோ-னாவின் கொடுமைகள் தணியும் முன்னரேயே மூர்க்கத் தனமான தாக்குதல்கள் பலவான்களால் ஏவப்பட்டு வருகின்றன.

உக்ரைன் கிழக்கு ஐரோப்பாவில் அமைந்திருக்கும் ஒரு நாடாகும். இந்நாடு 1991 இல் சோவியத் ரஸ்யாவிலிருந்து பிரிந்து சுதந்திரமடைந்த நாடுகளில் ஒன்றாகும். மொழி, கலாசார அடையாளங்கள் என்பவற்றில் உக்ரைனின் சில பிரதேசங்கள் ரஷ்யாவுடன் ஒத்துப் போகின்றன. அதனால் உக்ரைனைத் தன்னுடைய அங்கமாக ரஷ்யா கருதுகிறது. ஆனால் அந்நாட்டு மக்களோ தங்களை ஐரோப்பாவின் பிறநாடுகளுடன் அடையாளப்படுத்தவே விரும்புகின்றனர். தடையற்ற வர்த்தகம், முதலாளித்துவப் பொருளாதாரம், அதிகரித்த ஜனநாயக உரிமைகள், மேற்கத்திய நாடுகளின் நுகர்வுக் கலாசாரம், பொழுதுபோக்குகள் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டுள்ள அம்மக்கள் பழைய சோவியத் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டுடனான வாழ்க்கை முறையிலிருந்து சுதந்திரமான வாழ்க்கைக்கு ஆசைப்படுகின்றனர்.

அதனால் உக்ரைன் மக்களில் பெரும்பகுதியினர் ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்திருக்கவே விரும்புகின்றனர். இந்த நிலையில் 1994 களில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உக்ரைன் உடன்படிக்கை செய்து கொண்டது. அதனை ரஸ்ய சார்பு உக்ரைன் ஜனாதிபதி இடைநிறுத்தி வைத்தார். அதற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து தமது ஐரோப்பிய சார்பு நிலையை வெளிப்படுத்தியதோடு, ரஸ்ய சார்பு கொண்ட ஜனாதிபதி பதவியிழக்கவும் வழிசெய்தனர்.

உக்ரைன் ஐரோப்பிய சார்பு நிலையை எடுப்பதைத் தமக்கு ஆபத்தாகக் கருதத் தொடங்கிய ரஸ்யா, உக்ரைனுடன் முரண்படும் நிலை உருவானது. இந்நிலையில் உக்ரைனின் பகுதிகளில் ஒன்றான கிரீமியாவை 2014 இல் தமது பகுதியாக்கிக் கொண்டது ரஸ்யா. இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்துடன் அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய விரிவான வர்த்தக ஒப்பந்தத்தை செய்து கொள்ள விரும்புவதாக உக்ரைன் அறிவித்தது. அத்தோடு நேட்டோவுடன் இணையும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தது.

இவ்வாறு உருவாகி வந்த முறுகல் போக்கே உச்சக் கட்டத்தை அடைந்து தற்போது போராக உருவெடுத்துள்ளது. இவ்வாறான துரதிர்ஸ்டமான நிலை உருவா-வதைத் தவிர்க்கும் வகையில் பல தரப்பு முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த சூழலில், உக்ரைனில் ரஸ்ய ஆதரவு கிளர்ச்சிக் குழுக்களின் கட்டுப்பாட்டிலுள்ள டொனட்ஸ்க், லுஹான்ஸ்க் பகுதிகளை தனிநாடுகளாக அங்கீகரித்துள்ளது

இந்நிலையில் உக்ரைன் ஜனாதிபதி வோளோடிமிர் ஜெலன்ஸ்கி, "ரஷ்யா ஐரோப்பாவின் மிகப் பெரிய போரை தொடங்கியுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

ரஸ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், தனது நாட்டுக்கும் உக்ரெய்னுக்கும் இடையிலான போரில் வேறு யாராவது குறுக்கிட்டால், அவர்கள் இதுவரை சந்தித்திராத வரலாறு காணாத மோசமான அழிவுகளை சந்திப்பர்" எனக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது காடைத்தனமாக பேச்சு என்றே நாம் கருத வேண்டியுள்ளது

ஆனால் போரின் விளைவுகளை கருத்தில் கொண்ட ஐ.நா. பொதுச் செயலா-ளர் அன்டோனியோ குட்டரெஸ் ஐ.நா பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் உரையாற்றிய போது, "போரின் விளைவுகள் உக்ரைனுக்குப் பேரழிவை ஏற்படுத்தும். உலகப் பொருளாதாரத்தை வெகுவாக பாதிக்கும். ரஷ்ய அதிபரே... மனிதாபிமான அடிப்படையில் உங்களது படைகளைத் திரும்பப் பெறுங்கள்" என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அதுதான் உண்மை. இப்போர் உக்ரைனை மாத்திரமல்லாமல் உலகப் பொருளாதாரத்தையும் பெரிதும் பாதிக்கும். இதனை பொருளாதார நிபுணர்களும் சுடடிக்காட்டியுள்ளனர். இதன் விளைவாக எரிபொருள், எரிவாயு, தங்கம் என்பவற்றின் விலைகள் பெரிதும் உயரும், பங்குச் சந்தையும் பெருவீழ்ச்சி காணும். இவற்றின் விளைவாக பொருட்களின் விலைகள் அதிகளவில் அதிகரிக்கும். இவற்றின் தாக்கங்களுக்கு இலங்கை உட்பட உலகின் எல்லா நாடுகளும் முகம் கொடுக்க நேரிடும். அதனால் தற்போதைய உலகலாவிய நிலவரங்களைக் கருத்தில் கொண்டு புட்டின் தனது கடும் போக்கிலிருந்து விடுபட்டு போரிலிருந்து விலகிச் செல்ல வேண்டும் என்பதையே உலகம் விரும்புகின்றது என்பதை அவர் அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## போரை நிறுத்துங்கள் - கவிஞர் தியாரூ

போரை நிறுத்துங்கள் - ஐயா
போரை நிறுத்துங்கள்!
யாரை யார்கொன்று
யார்தான் வாழ்ந்திருப்பார்!
வேரை அழிப்பதற்கு
வீரம் அவசியமா!
கூரை தனையெரித்துக்
கோயில் ஒளிபெறுமா!
பஞ்சம் பசியென்று - பலர்
பாரில் தவித்திருக்க
அஞ்சி நடுநடுங்கி
ஆவி துடித்திருக்க,
நஞ்சைப் பொழிவதென்ன்
நாசம் புரிவதென்ன!
கொஞ்சம் சிந்தியுங்கள்
உலகைக் காத்திடுங்கள்!
தீயில் வேகுதற்கோ - செந்
தேனார் மென்மலர்கள்!
போரில் வீழ்வதற்கோ
பேசும் பொற்கிளிகள்!
யாரைக் கேட்பதுவோ
யார்தான் காப்பதுவோ்
போரை நிறுத்துங்கள்
புவியைக் காத்திடுங்கள்!

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# "இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைத்து, ஆக்கிரமிப்பு மற்றும் நில அபகரிப்புகளை நிறுத்துங்கள்"

## தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் தமிழ் தாய்மார்கள்

தயவு செய்து இலங்கையை ஐசிசியிடம் ஒப்படைத்து, ஆக்கிரமிப்பு மற்றும் நில அபகரிப்புகளை நிறுத்துங்கள். என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் தாய்மார் வேண்டுகோள்.

வவுனியா கொட்டகையில், கடந்த ஐந்து வருடங்களாக எமது ஆற்றொணா போராட்டத்தை தொடர்கின்ற நாம் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்கள். வவுனியா மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து அரை மைல் தொலைவில் யு9 வீதியில் இந்தச் கொட்டகை அமைந்துள்ளது. ஒரு நாளைக்கு ஒரு உணவைத் தவிர்த்து 1833வது நாளாக தொடர்ந்து இரவும் பகலும் இங்கே இருக்கிறோம்.

இலங்கை இனப்படுகொலைக்கு பதிலளிக்கும் வகையில் UNHRC இன் செயலற்ற தன்மையால் நாங்கள் ஆழ்ந்த அதிருப்தி அடைகிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கவே இந்தக் கடிதத்தை எழுதுகிறோம்.

வன்னியில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு பதின்மூன்று வருடங்கள் ஆகின்றன. இவ்வளவு காலம் இருந்தும், தமிழர்களுக்கான நீதியையோ அல்லது இலங்கை போர்க்குற்றவாளிகளுக்கு பொறுப்புக்கூறலையோ அடைய ஐ.நா. எதுவித முயற்சியும் எடுக்கவில்லை.

### தமிழர்களுக்கு பின்வருபவை தேவை:

1. தயவு செய்து, உலக நாகரீகம் மற்றும் சட்டத்தை பேணுவதற்காக, இலங்கை இனப்படுகொலையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்புங்கள். நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், நீங்கள் இந்த உலகில் அதிக குழப்பங்களைத் தழுவுகிறீர்கள்.

2. பாதுகாப்பான, பாதுகாக்கப்பட்ட மற்றும் மீள முடியாத தமிழ் அரசை அடிப்படையாகக் கொண்டு தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு எமக்குத் தேவை. ஒற்றையாட்சியின் கீழ் 13வது திருத்தம் செயல்படாது. ஒரு மாகாணசபைத் தேர்தலைக் கூட இரண்டு வருடங்களுக்கு மேல் நடத்த முடியாத இந்த 13வது திருத்தம் என்பது தமிழர்களால் பேசக் கூட முடியாத ஒன்று.




ஐ.நா.வின் தோல்வியின் காரணமாக, இலங்கை அரசாங்கம் ஐ.நா அல்லது UNHRC பற்றி எந்த அக்கறையும் இல்லாமல் அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்புகளை தொடர்கிறது அல்லது சில சந்தர்ப்பங்களில் துரிதப்படுத்தியுள்ளது.





இலங்கை சுதந்திரத்திற்குப் பிறகு தமிழர்களின் கிழக்கு மாகாணத்தில் இருந்து நிலங்களை அபகரிக்கத் தொடங்கியது.

இப்போது கிழக்கில் உள்ள தமிழர்களை அவர்களின் நிலங்கள் மற்றும் வீடுகளில் இருந்து வெளியேற்றிய பின்னர், அனைத்து வகையான பொய்யான சாக்குப்போக்குகளின் கீழும் அதிகமான நிலங்களை அபகரிக்க இலங்கை வடக்கு மாகாணத்திற்குச் சென்றுள்ளது. அது நிறுத்தப்பட வேண்டும்.

### அவர்களின் அடக்குமுறை மற்றும் திருட்டைத் தொடர, அவர்கள் பின்வருவனவற்றைப் பயன்படுத்தினர்:

1. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் யாரேனும் பொலிஸாரால் அல்லது இராணுவத்தால் பிடிக்கப்பட்டால் அதுவே அந்த தமிழர்களின் முடிவு. யாருமே வழக்குப் பதிவு செய்ய முடியாத அல்லது அவர்களுக்கு எங்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. அவர்கள் ஒரு தடயமும் இல்லாமல் மறைந்து விடுகிறார்கள்.

2. மேலும், பலவந்தமான நாடுகடத்தல் கொள்கையின் மூலம் தமிழர்களை அவர்களது தொழில்கள், வீடுகள் மற்றும் தமிழர் தாயகத்திலிருந்து வெளிநாடுகளுக்குத் துரத்துவதற்கான அரசாங்க நிகழ்ச்சியை இலங்கை ஏற்பாடு செய்தது.

3. பின்னர், 2009 ஆம் ஆண்டு, சீனா மற்றும் பாகிஸ்தானில் இருந்து இலங்கை, "நோ ஃபையர் சோன்" பகுதியில் 1,45,000 தமிழர்களைக் கொன்று குவித்தது.

90,000 விதவைகள், 50,000 ஆதரவற்றோர், மற்றும் நூறாயிரக்கணக்கான மக்கள் இன்னும் அன்புக்குரியவர்களின் இழப்பிற்காக வருந்துகிறார்கள்.

இலங்கையானது தமிழர்களின் உரிமையான நிலங்களை பறித்து சிங்களவர்களை எங்கள் மண்ணில் குடியேற்றுகிறது. இது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாகும்.

அடக்குமுறையான காலநிலை அச்சுறுத்தல், பயம் மற்றும் விரக்தி போன்ற உணர்வை ஏற்படுத்தியதால் பல தமிழர்களை மூச்சுத்திணறல் மற்றும்

(தொடர்ச்சி 5ம் பக்கம் ---->)



கனடிய செய்திகள் Canadian News

# உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பானது உலக நாடுகள் வகுத்த கட்டமைப்பை மீறுகின்ற செயலாகும் என்கிறார் கனடியப் பிரதமர்

தற்போது இடம்பெற்று வரும் உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பானது உலக நாடுகள் தங்களுக்குள் வகுத்துக் கொண்ட ஒழுங்கான கட்டமைப்பை மீறும் செயலாக தான் கருதுவதாகவும் இது உலகிறகு உரு கடுமையான அச்சுறுத்தல் எனவும் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் ஒட்டாவாவில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

வியாழக்கிழமை அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், ரஸ்யாவின் தற்போதைய உக்ரைன் மீதான தாக்குதல் தொடர்பாக கனடா பல அவசர முடிவு-களை எடுக்க வேண்டியுள்ளது அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிற ஐரோப்பிய மற்றும் G7 நட்பு நாடுகளுடன் இணைந்து செயல்படும் கனடா, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு "ஐரோப்பிய ஸ்திரத்தன்மைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல்" என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியதற்கு பதிலளிக்கும் வகையில் இந்த வாரம் அதன் இரண்டாவது சுற்று பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.: சர்வதேச சட்டத்தை மீறி, உக்ரேனிய தலைநகரான கிய்வ் மீது ஏவுகணைகள் வீழ்ந்ததால் மனித துன்பத்திற்கு வழிவகுத்த ஒரு இறையாண்மை மிக்க நாட்டின் மீது "கொடூரமானதும் நாடு துண்டாடப்படுவதுமான ஒரு தாக்குதல் இது" என்று ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் தெரிவித்தார்.

ரஷ்யாவின் ஆட்சி அதிகாரத்தோடு தொடர்புடைய 31 தனிநபர்களின் நிறுவனங்கள் மற்றும் 27 வங்கிகள் மற்றும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கும் நகர்வுகளை கனடிய நிதி அமைச்சகம் கோடிட்டுக் காட்டியது, கனே-டிய ஏற்றுமதியில் சுமார் 750 மில்லியன் டாலர்கள், குறிப்பாக ரஷ்யாவிற்கு விண்வெளி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கனிம ஏற்றுமதிகளை நிறுத்தவும், மேலும் பல ரஷ்ய நிதி நிறுவனங்களுடன் பேணப்படும் அனைத்து வி-தமான பரிவர்த்தனைகளையும் தடை செய்யவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்றும் கன-டாவின் தடை நடிவடிக்கைகள் எதிர்காலத்தில் ரஸ்யாவை நன்கு பாதிக்கும் என்பதை ரஸ்ய அதிபர் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் அவர் இல்லை என்றும் குறிப்பிட்டார்.





# வவுனியாவில் பேரூந்துக்காக காத்திருந்த யுவதி மீது லொறி மோதி பரிதாப மரணம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராயன்குளம் பகுதியில் பேருந்திற்காக காத்திருந்த தந்தையும் மகளும் அவ்வீதியால் வந்து கொண்டிருந்த பேருந்தை வழிமறித்து அதில் ஏற முற்பட்டுள்ளனர்.

இதன்போது வவுனியாவில் இருந்து யாழ்நோக்கி சென்றுகொண்டிருந்த பாரவூர்தி கட்டுப்பாட்டை இழந்து குறித்த இருவரையும் மோதியுள்ளது.

விபத்தில் பேருந்திற்காக காத்திருந்த சிவசுப்பிரமணியம் சிந்துயா வயது 33 என்ற பெண் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

அவரது தந்தை படுகாயமடைந்த நிலையில்கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

முடக்கி வைத்துள்ளது. சிலரே தைரியமாக பேசுவார்கள்.

இதற்கிடையில், இலங்கையின் ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறை, கற்பழிப்பு, காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் நில அபகரிப்பு, தமிழர்களின் சடலங்கள் கடல் கரையோரம் திரும்புவதைத் தொடர்கிறது.

இலங்கையை யாராவது தடுத்து நிறுத்த வேண்டும். போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா.வின் எந்தவொரு தீர்மானத்தையும் ஆதரிப்பதிலோ அல்லது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு காண்பதிலோ இந்தியா ஆர்வம் காட்டவில்லை. இலங்கையை கட்டுப்படுத்த தமிழர் பிரச்சினையை இந்தியா பயன்படுத்துகிறது. ஆனால் இந்தியாவை விட சீனாவுடன் இலங்கை இன்னும் சிறந்த உறவை கொண்டுள்ளது.

ஐ.நா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் மட்டுமே தமிழர்கள் சார்பாகப் பரிந்துரை செய்து இலங்கையின் ஆக்கிரமிப்பை நிறுத்த முடியும்.

நன்றி.
தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் தமிழ் தாய்மார்கள்


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinic canada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் தேசிய அபிவிருத்திக்காக வெளிநாட்டிலுள்ள இலங்கை தொழில் நிபுணர்களின் வலையமைப்பு பிரதமர் மஹிந்தவினால் அறிமுகப்படுத்தப்பட்டது

இலங்கையின் தேசிய அபிவிருத்திக்காக தேசிய அறிவியல் அறக்கட்டளையை (NSF) அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டிலுள்ள இலங்கை தொழில் நிபுணர்களின் வலையமைப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் திங்கட்கிழமை (21) முற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையின் சர்வதேச ஒத்துழைப்பை தேசிய வளர்ச்சிக்கு பங்களிக்கச் செய்யும் வகையில் தேசிய அறிவியல் அறக்கட்டளையினால் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள 950க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது இந்த வலையமைப்புடன் இணைந்துள்ளனர்.

நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்க ஆர்வமுள்ள கல்வி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் துறையில் உயர் பதவிகளை வகிக்கும் வெளிநாட்டிலுள்ள இலங்கையின் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் மற்றும் தொழில் நிபுணர்களுக்கு நம்பகமான மற்றும் யதார்த்த பொறிமுறையின் தேவையை பூர்த்தி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.








உயர்கல்வி மற்றும் திறனை வளர்ப்பதற்கு அதிக வாய்ப்புகளை வழங்கல், கல்வி ஒத்துழைப்பு மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட பரந்த நோக்கத்தின் கீழ் தேசிய அறிவியல் அறக்கட்டளை மற்றும் இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கம் (SLASSCOM) ஆகியவற்றிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்த மும் இதன்போது கையெழுத்தானது.

கலாநிதி பந்துல விஜே (அமெரிக்கா), பேராசிரியர் டிலந்த பெர்னாண்டோ (கனடா), பேராசிரியர் மொன்டி காஸிம் (ஜப்பான்), பேராசிரியர் சாந்தி மெண்டிஸ் (ஸ்விட்சர்லாந்து), பேராசிரியர் டிலந்த அமரதுங்க (ஐக்கிய இராச்சியம்), பேராசிரியர் சமன் ஹல்கமுகே (அவுஸ்திரேலியா) ஆகியோர் காணொளி தொழில்நுட்பம் ஊடாக நிகழ்வில் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் தேசிய அறிவியல் அறக்கட்டளையின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன உள்ளிட்ட தேசிய அறிவியல் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# திருக்கேதீஸ்வரம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் யாத்திரிகள் தங்குமிட கட்டுமானப் பணியை இடை நிறுத்த வேண்டாம்

## திருகேதீஸ்வர கிராம மக்கள் உரிய அதிகாரிகளுக்கு மகஜர் கையளிப்பு

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் யுத்த காலத்தில் அழிக்கப்பட்ட யாத்திரிகள் தங்கும் இடம் மீள அமைக்கப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த யாத்திரிகள் தங்கும் இடம் அமைக்கும் நடவடிக்கையை தடுத்து நிறுத்த வேண்டாம் என கோரி திருகேதீஸ்வர கிராம மக்கள் செவ்வாய்க்கிழமை (22) மன்னாரில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வீதியில் பொது மக்கள் மற்றும் யாத்திரிகளின் நன்மை கருதி உரிய அனுமதியுடன் அமைக்கப்பட்டு வந்த குறித்த தங்குமிடத்தின் பணிகள் அண்மையில் எள்ளுப்பிட்டி பகுதியை சேர்ந்த சில மக்களின் எதிர்ப்பால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் குறித்த யாத்திரிகள் தங்குமிடம் சட்ட ரீதியாக அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு அமைக்கப்பட்டு வருவதுடன், குறித்த பகுதியில் யுத்தத்திற்கு முன்னர் யாத்திரிகர் மடம் ஒன்று காணப்பட்டதாகவும் யுத்தத்தின் போது அழிவடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போது கிராம மக்கள் இணைந்து அப்பகுதி மக்களின் நன்மை கருதியும் அதே நேரத்தில் மத வழி பாடுகளுக்கு வரும் யாத்திரிகர்களின் நன்மை கருதியும் குறித்த யாத்திரிகர் தங்குமிடம் மீண்டும் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு பணிகள் இடம்பெற்று வருகின்றது.



அனைத்து தரப்பினருடைய முழுமையான அனுமதியை பெற்றுக் கொண்டு குறித்த பணிகள் இடம்பெற்று வருகின்ற போதும் எள்ளுப்பிட்டி மக்கள் சிலரது எதிர்ப்பால் குறித்த பணிகள் இடை நிறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த அபிவிருத்தி பணியை தடுக்க எவருக்கும் உரிமை இல்லை என்பதை தெரிவித்துள்ளதோடு, இவ்வாறான இடையூறுகளை ஏற்படுத்த இடமளிக்க வேண்டாம் என திருக்கேதீஸ்வர மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



திருக்கேதீஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்கம்,சிவபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இணைந்து குறித்த கிராம மக்களுடன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்,மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் இறுதியாக மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் ஆகியோருக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்துள்ளதோடு, தமக்கான உரிய தீர்வை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் போது கருத்து தெரிவித்த மன்னார் பிரதேசச் செயலாளர் குறித்த பகுதியில் இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடான நிலை நீடித்து வருகின்றமையினால் எதிர் வரும் சிவராத்திரி நிகழ்வு நிறைவடைந்த பின்னர் இரு கிராம பிரதிநிதிகளையும் அழைத்து இணக்கப் பாடான கலந்துரையாடல் மூலம் பிரச்சனைக்கு தீர்வு பெற்றுத் தருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாக மக்களிடம் பிரதேசச் செயலாளர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் மாந்தை கிராமத்தில் அரச காணியில் தனியார் நிதியில் அமைக்கப்பட்டு வரும் கட்டிடத்தின் அபிவிருத்தி பணி யை இடை நிறுத்தக்கோரி திங்கட்கிழமை (21) காலை மாந்தை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிராம மக்கள் ஒன்றிணைந்து மன்னார் பிரதேச செயலாளரிடம் அவசர மகஜர் ஒன்றை கையளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னாரில் தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற "வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான விசேட செயலமர்வு"

இலங்கையில் வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான சமூக குழுக்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான விசேட செயலமர்வு தேசிய சமாதான பேரவையின் பிரதிநிதிகளான நஜாத் மற்றும் அமீல் ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் மன்னார் மாவட்ட தொடர்பாடலுக்கான மையத்தின் (CCT) இணைப்பாளர் ஜோண்சன் தலைமையில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் செவ்வாய்க்கிழமை (22) காலை இடம்பெற்றது.



தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் இலங்கை கெல்விட்டாஸ்க் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரனையில் மாவட்ட ரீதியில் உள்ள சமூக பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களை உள்ளடக்கி மேற்படி செயலமர்வு இடம் பெற்றது.



பிரதேச ரீதியாக ஏற்படும் பிரிவினைகள், வன்முறை தீவிரவாத செயற்பாடுகளை நோக்கி நகர்வதை தடுக்கும் நோக்கிலும், பிரதேச மற்றும் மாவட்ட ரீதியில் இயங்கி வரும் சிவில் சமூக குழுக்களின் தீவிரவாதத்திற்கு எதிரான செயல் திறன்களை மேம்படுத்தும் விதமாக குறித்த செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது.

குறித்த செயல் திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இலங்கையில் இன ரீதியான முரண்பாடுகள் அதிகம் காணப்படும் ஆறு மாவட்டங்கள் உள்வாங்கப்பட்டு அப் பகுதிகளில் இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**மன்னார் நிருபர்**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கையில் வடக்கு கிழக்கு ஊடகவியலாளர்களை தொழில்முறை சார்ந்தவர்களாக மாற்றுவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது

## இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கென நிலையான அல்லது தகுந்த சம்பளம் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எமது அமைச்சிற்கு கிடைக்கின்றன அதே வேளை வடக்கு கிழக்கு ஊடகவியலாளர்களை தொழில்முறை ஊடகவியலாளர்களாக மாற்றுவதற்கும் நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். அதற்காகவே ஊடகவியலாளர்களுக்கு பட்டயக்கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்கிறோம். அதன் மூலம் சிறந்த தொழில்முறை ஊடகவியலாளர்களை உருவாக்க முடியுமென நம்புகிறோம்.

இவ்வாறு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் டளஸ் அழகப்பெருமவுக்கும் யாழ்ப்பாண மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் இடையி-லான சிநேகபூர்வ சந்திப்பொன்று நடைபெற்றபோது பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோது இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில். தமிழ் மொழியில் உங்கள் முன் என்னால் பேச முடியாதமைக்காக நான் வெட்கப்படுகிறேன். அதில் என்னுடைய பிழையில்லை. அரசியல் பொறிமுறையிலுள்ள பிழை. இதனை நாம் நிவர்த்தி செய்ய வேண்டும் யாழ். மாவட்டத்திலேயே 05 பிராந்திய பத்திரிகைகள் உள்ளன. அதனால் இங்கே பல பிராந்திய ஊடகவியலாளர்களும் உள்ளதாக அறிகிறேன்.

ஊடகவியலாளர்களின் கல்வித் தகமைகளை மேம்படுத்தும் வகையில், பட்டயக்கல்வியை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். அதன்போது பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். அதேவேளை ஊடகத்துறைக்கான ஜனாதிபதி விருது இந்த வருட இறுதிக்குள் வழங்க நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். அதிலும் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கவுள்ளோம்.

ஊடகவியலாளர்களுக்கான காப்புறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் யாழ். மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள் எத்தனை பேர் உள்வாங்கப்பட்டார்களென்ற தகவல் தெரியவில்லை. காப்புறுதிகள் தொடர்பில் தேசிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ளோம். பிராந்திய பத்திரிகைகளில் விளம்பரம் செய்ய தவறிவிட்டோம். அந்த தவறை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.



இனிவரும் காலங்களில் அரச அறிவித்தல்களை பிராந்திய ஊடகங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதனூடாக பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு தகவல்கள் எளிதில் கிடைக்கும்.

அதேவேளை பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் உதவிகள், கடன் உதவிகள், புலமை பரிசில்கள் என்பன உரிய முறையில் சென்றடைவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. அதனை ஏற்றுக்கொள்கிறோம். இனிவரும் காலங்களில் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் ஊடாக அறிவித்தல்களை வழங்கி அவற்றினூடாக பயனாளிகளாக ஊடகவியலாளர்களை தெரிவு செய்யும் பொறிமுறையை ஆரம்பிக்கவுள்ளோம். அத்துடன் இந்திய நிதியுதவியில் யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் கலாசரா மண்டபத்தில் ஊடகவியளலாளர்களுக்கென ஒரு தொகுதியை ஒதுக்குவது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசவுள்ளோம். இத் தொகுதியில் கணனி மயப்படுத்தப்பட்ட நூலக வசதிகள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதனூடக பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு பெரிதும் நன்மை பயக்குமென நம்புகிறோம். என்றார் அமைச்சர்

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு இலங்கையின் அனைத்து மக்களுக்கும் பாதகத்தை ஏற்படுத்திவிட்டு இப்போது இந்திய அரசை வசீகரிக்கின்றனர்

## அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பேட்டி



தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலங்களில் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் பாதகத்தை ஏற்படுத்திவிட்டு இப்போது இந்திய அரசை வசீகரிக்கின்றனர் என இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இலங்கை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். அவர் வழங்கிய பேட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கடுமையாகச் சாடியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் சீனாவின் பிரசன்னம் தொடர்பாக இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையின் செய்தியாளர் முன்வைத்த கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில் "இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையேயான நட்புறவுகளில் உயர்நிலையை அடைந்துள்ளதாகவும், இலங்கையில் சீனாவின் பிரசன்னம் பற்றிய கவலைகள் "கடந்த காலத்துக்குரியவை" என்றும் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது: இந்திய மீனவர்களின் விவகாரம் தொடர்பாக குறிப்பிட்ட அவர், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசிக்கும் போது கைது செய்யப்படுவது, இன்றைய வேளையில் இந்தியாவுடனான உறவுகளில் ஒரு "பாரதூரமான தருணம்" என்று கூறினார்.

13 ஆவது திருத்தம் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர், மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் தேர்தல் சட்டங்களை மாற்றியமைக்கும் தீர்மானத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியதன் காரணமாக 13வது திருத்தத்தின் அமுலாக்கத்தில் இடைநிறுத்தம் ஏற்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

கேள்வி: நீங்கள் டெல்லிக்குச் சென்றிருந்த போது, இந்த மாத இறுதியில் இடம்பெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில், இந்திய மத்திய அரசாங்கத்திடம் இருந்து ஏதேனும் உத்தரவாதத்தை மேலதி-கமாக நாடினீர்களா?

பதில்: பெப்ரவரி 14 அன்று எங்களிடம் சிக்கலான பிரதியொன்று வழங்கப்படும். நாங்கள் இந்திய அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறோம். மேலும், தற்போதைய மற்றும் முன்னைய காலத்தில் ஏற்பட்டுள்ள அனைத்து முன்னேற்றங்கள் குறித்தும் இந்தியா மிகவும் விழிப்புடன் இருக்கக் கூடும். குறிப்பாக காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவல-கம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான பணியகம், நிலையான அபிவிருத்தி இலக்குகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற உள்ளூர் பொறிமுறைகள் என குறிப்பிடப்படும் நிறைவேற்றப்பட்ட வேலைகள் என்பனவாகும்.

கேள்வி: ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி எஸ் பி விடயத்தில் நீங்கள் எந்தளவு ஈடுபாட்டைக் கொண்டுள்ளீர்கள்?

பதில்: இலங்கையில் இருந்து ஜி.எஸ்.பி பிளஸ் திரும்பப் பெறப்படுவதுஅதிகளவுக்கு சாத்தியமற்றது என்று நாம் நினைக்கிறோம். இருப்பினும் அது நிகழும் என்ற ஊகமான சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்வோம். அதன் சுமையை யார் சுமக்கப் போகிறார்கள்? இலங்கையில் வசிப்பவர்களே குறிப்பாக ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களாவர். ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களில் 90% பெண்கள். அவர்களில் பலர் தங்கள் குடும்பங்களை தாபரிக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. அத்துடன், மீனவ சமூகங்கள் பாதிக்கப்படும். எனவே அதை அகற்றினால், இது அரசாங்கத்திற்கு எதிரான ஒரு தண்டனை நடவடிக்கை அல்ல. இது இலங்கை சமூகங்களின் வறிய பிரிவினருக்கு எதிரான ஒரு தண்டனை நடவடிக்கையாகும்.

கேள்வி: இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் திரும்பத் திரும்ப எழுந்துள்ள பல விடயங்களில் ஒன்றாகவும், இலங்கையில் தீர்வு காண முடியாத நிலைமையில் உள்ள ஒரு விடயமாகவும் தமிழர் அரசியல் பிரச்சினை உள்ளது. பதின்மூன்றாவது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்பின் ஒரு அங்கமாகும். பதின்மூன்றாவது திருத்தத்தின் முதன்மையான பண்பு மத்திய அதிகாரத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக என்ன நடந்தது? மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவில்லை.

பதில்: அதற்கான காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர வேறு யாரும் இல்லை.இலங்கையின் 2015 முதல் 2019 வரையிலான நிர்வாகம் இந்தத் தேர்தல்களை நடத்தவில்லை.தாங்கள் தோற்கடிக்கப்படுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும், அது மிகவும் அவமானகரமான தோல்வியாக இருக்கலாம். எனவே அந்தத் தேர்தலை நடத்துவதில்லை என்று முடிவு செய்துள்ளனர். அதேநேரத்தில் நீதிமன்ற உத்தரவை அவர்களால் மீற முடியவில்லை. ஐதேர்தல் நடத்தப்பட வேண்டும்ஸ. எனவே அவர்கள் ஒரு புத்திசாலித்தனமான தீர்மானத்தை எடுத்தனர். சரி, நாங்கள் தேர்தலை நடத்துவோம், எனினும் தேர்தல் முறைமை ஏற்றுக் கொள்ள முடியாதது. தேர்தல் முறைமையை மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான் தீர்மானம்.

இவ்வாறு அந்த பேட்டி அமைந்திருந்தது.

# இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்த 47 இந்திய மீனவர்கள் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்

இலங்கை கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்த 47 இந்திய மீனவர்கள் சென்னைக்கு விமானம் மூலும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப் பட்டினம் பகுதி-யில் இருந்து கடந்த டிசம்பர் மாதம் மீன்பிடிக்க சென்ற 56 மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றத்திற்காக இலங்கை கடற்படையினர் கைதுசெய்ததாக இலங்கை அரசின் தரப்பில் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் கைதான மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் கடந்த மாதம் 25ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். விடுதலை செய்யப்பட்ட இந்த 56 மீனவர்களில் 9 மீனவர்கள் மட்டும் கடந்த 4 நாட்களுக்கு முன்னர் விமானம் மூலம் தமிழகம் அனுப்பப்பட்டனர். கொழும்பில் இந்திய தூ தரக அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் தனிமையில் தங்க வைக்கப்பட்டிருந்த எஞ்சிய 47 மீனவர்களும் விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.



உலக செய்திகள்
World News

# ஆப்கானை தலிபான்கள் கைப்பற்றியது தொடக்கம் பாகிஸ்தானில் பயங்கரவாத செயற்பாடுகள் அதிகரித்திருப்பு

பாகிஸ்த்தானில் ஆயுதம் தாங்கிய குழுவினரால் தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பெற்று வருவதாகவும் அதிலும் அண்மைய தாக்குதல்களில் பாகிஸ்தானில் பல படை வீரர்கள் கொல்லப்பட்டிருப்பது அரசிற்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது என்றும் பாகிஸ்த்தானி பிரதமர் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். தமது அண்டை நாடான ஆப்கானை கடந்த ஆண்டு தலிபான்கள் கைப்பற்றியது தொடக்கம் பாகிஸ்தானில் பயங்கரவாத செயற்பாடுகள் அதிகரித்திருப்பதை காட்டுவதாகவும் மேற்படி அதிகாரிகளின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் பாகிஸ்தான் மெதுவாக குழப்பம் மற்றும் ஸ்திரமற்ற நிலைக்கு சரிந்து வருவதாக அமைதி ஆய்வுகளுக்கான பாகிஸ்தான் நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் இஸ்லாமாபாத், லாஹோர் உட்பட பிரதான நகரங்களை இலக்குவைத்து பலவேறு பயங்கரவாத சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக கூறப்படுகிறது. ஜனவரி 25 இல் பலுகிஸ்தான், கெச்சில் இடம்பெற்ற தாக்குதலில் 10 பாக். இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒரு வாரத்தில் பெப்ரவரி 2 ஆம் திகதி அதே மாகாணத்தின் நொஷ்கி மற்றும் பன்சுர் மாவட்டங்களில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாகிஸ்த்தானில் இந்து மற்றும் கிறிஸ்த்தவ பிரஜைகளுக்கு எதிரான மதவாதத் தாக்குதல்கள் அதிகரிப்பு





பாகிஸ்த்தானில் இந்து மற்றும் கிறிஸ்த்தவ பிரஜைகளுக்கு எதிரான மதவாதத் தாக்குதல்கள் கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதனால் ஆயிரக்கணக்கான இந்து மற்றும் கிறிஸ்த்தவ மக்கள் பாகிஸ்த்தானை விட்டு வெளியேறியுள்ளனர். ஆனால் தற்போது கூடு தாக்குதல்களின் அதிகரிப்பு தொடர்ச்சியான அட்டூழியங்கள் மற்றும் கொடூர குற்றங்கள் என அவர்கள் முகம்கொடுக்கும் சம்பவங்களி இடம்பெற்றே வருகின்றன என அறிவிக்கப்படுகின்றது.

எனவே, பாகிஸ்தானில் உள்ள சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக உடன் தலையிடும்படி ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரசுக்கு இந்திய உலக மன்றத்தின் தலைவர் புனீத் சிங் சௌதொக் கடிதம் எழுதியுள்ளார். "பாகிஸ்தானில் வாழ்கின்ற சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காக நீங்கள் உடன் தலையிட வேண்டும் எனக் கோரி இந்தக் கடிதத்தை நான் எழுதுகிறேன். அவர்கள் அங்கு தொடர்ச்சியான அட்டூழியம் மற்றும் கொடூர குற்றச்செயல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். சிறுபான்மையினர் குறிப்பாக இந்தியாவுடன் நெருக்கமான உறவைக் கொண்ட ஹிந்து மற்றும் சீக்கியர்கள் துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள்" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 4000 சொகுசு கார்களை சுமந்து சென்ற கப்பல் நடுக்கடலில் தீ



Porsche, பென்ட்லி, Audi, Lamborghini மற்றும் வோக்ஸ்வேகன் என சுமார் 4000 சொகுசு கார்களை சுமந்து சென்ற சரக்கு கப்பல் ஒன்று அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள போர்ச்சுகல் நாட்டின் அசோர்ஸ் தீவுகள் பகுதியை கடந்து சென்று போய்க்கொண்டிருந்தபோது நடுக்கடலில் தீ பற்றியுள்ளது. இந்த சம்பவம் கடந்த புதன்கிழமை அன்று நடைபெற்றுள்ளது.

அதைத்தொடர்ந்து கப்பலில் சென்ற கப்பல் குழு உறுப்பினர்கள் 22 பேரை போர்ச்சுகல் கடற்படையினர் மீட்டு பாதுகாப்பாக தங்க வைத்துள்ளனர். இருந்தும் அந்தக் கப்பலில் தீ அணையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தீயணைப்பு படகுகள் நேற்றுதான் கப்பலை நெருங்கியுள்ளது. அப்போதிலிருந்தே தீயணைப்பு வீரர்கள் தங்கள் பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக கடைசியாக கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பணி எப்போது முடியும் என்பது இப்போதைக்கு சொல்ல முடியாது என கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



# ரஷ்யாவின் உக்ரைன் மீதான தாக்குதல் உலக பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துமா?

உக்ரைன் மீதான ரஷ்யாவின் அச்சுறுத்தல் படையெடுப்பு, உலக அளவிலும் அமெரிக்காவிலும் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தலாம், நிச்சயமற்ற தன்மையை அதிகரிக்கலாம், பண்டங்களின் சந்தைகளை உலுக்கலாம் மற்றும் உலகம் முழுவதும் எரிவாயு மற்றும் உணவு விலைகள் உயரும் போது பணவீக்கத்தை அதிகரிக்கலாம்.

ரஷ்யா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் முக்கிய உற்பத்தியாளராக உள்ளது, மேலும் புவிசார் அரசியல் மோதல்கள் சமீபத்திய வாரங்களில் விலையை கடுமையாக உயர்த்தியுள்ளன. இது உலகின் மிகப்பெரிய கோதுமை ஏற்றுமதியாளராகவும் உள்ளது, மேலும் இது ஐரோப்பாவிற்கு ஒரு முக்கிய உணவு வழங்குனர் ஆகும்.

அமெரிக்கா ரஷ்யாவிலிருந்து ஒப்பீட்டளவில் குறைவாகவே இறக்குமதி செய்கிறது, ஆனால் ஒரு மோதலால் ஏற்படும் பொருட்களின் நெருக்கடியானது, அமெரிக்கா உட்பட உலகின் பெரும்பகுதி அனுபவிக்கும் போது, குறைந்தபட்சம் தற்காலிகமாக மூலப்பொருட்கள் மற்றும் முடிக்கப்பட்ட பொருட்களின் விலைகளை உயர்த்தும் விளைவுகளை ஏற்படுத்தலாம். இது விரைவான பணவீக்கத்தை ஏற்படுத்தும். Covid-19 இனால் உலக நாடுகளின் பொருளாதாரத்தில் அதிக பாதிப்பு ஏற்பட்டு இருக்கும் இந்த நிலையில் இவ்வாறான ஒரு போர் இடம் பெறுதல் என்பது உலக நாடுகளின் பொருளாதாரத்திற்கு நல்ல ஒரு நிலை அல்ல.



உலகளாவிய அமைதியின்மை அமெரிக்க நுகர்வோரை பயமுறுத்துவதால், செலவுகள் மற்றும் பிற பொருளாதார நடவடிக்கைகளை குறைக்க அவர்களை தூண்டுகிறது. மந்தநிலை கடுமையாக இருந்தால், மார்ச் மாதத்தில் வட்டி விகிதங்களை உயர்த்தத் திட்டமிடும் பெடரல் ரிசர்வ், எவ்வளவு விரைவாகவும், எவ்வளவு தீவிரமாகவும் கடன் வாங்கும் செலவை அதிகரிப்பது என்பதைத் தீர்மானிப்பது கடினமாகிவிடும்.

புவிசார் அரசியல் அபாயங்கள் "உலகளாவிய எரிசக்தி விலைகளை அதிகரிக்கலாம் அல்லது உலகளாவிய விநியோக பற்றாக்குறையை அதிகரிக்கலாம்", ஆனால் அவை வளர்ச்சிக்கான கண்ணோட்டத்திற்கு ஆபத்து என்று மத்திய வங்கியாளர்கள் தங்கள் சமீபத்திய கூட்டத்தில் முன்வைத்து இருப்பது குறிப்பிடதக்கது.

- இரா. சஹானா

இந்தியா செய்திகள்
India News

# பத்திரிகையாளர்கள் நலன் கருதி "பத்திரிகையாளர் நல வாரியக் குழு" தமிழக அரசால் நிறுவப்பெற்ற அறிவிப்பு வெளியானது



கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழக சட்டசபையில் நடைபெற்ற மானியக்கோரிக்கை மீதான விவாதத்தின்போது, செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன், பத்திரிகையாளர்களுக்கு நலவாரிய உதவித் தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் "பத்திரிகையாளர் நல வாரியம்" அமைக்கப்படும் என அறிவித்தார். இதனை தொடர்ந்து, அதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது "தமிழக செய்தித்துறை அமைச்சர் 2021-22 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரில், 6.9.2021 அன்று நடைபெற்ற செய்தி மற்றும் விளம்பரம் தொடர்பான மானியக் கோரிக்கையின் மீதான அறிவிப்புகளில், தமிழகத்தில் முதன்முறையாக, உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக தமிழக முதல்வர் அறிவித்து பெருமை சேர்த்துள்ளார். அதனடிப்படையில், உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செவ்வனே செயல்படுத்துவதோடு, நலவாரிய உதவித் தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில், "பத்திரிகையாளர் நல வாரியம்" அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

செய்தித்துறை அமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செவ்வனே செயல்படுத்துவதோடு, நலவாரிய உதவித் தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் "பத்திரிகையாளர் நல வாரியம்" ஒன்றை உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது.

பத்திரிகையாளர் நல வாரியத்திற்கு வரப்பெறும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து, பயனாளிகளை தேர்வு செய்து, நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு, பத்திரிகையாளர் நல வாரியக் குழு ஒன்றை அமைத்து, அதற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களை பின்வருமாறு நியமித்து அரசு ஆணையிடுகிறது.

இந்த நல வாரியத்தின் தலைவராக செய்தித்துறை அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலர், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர், வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர், தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலர், தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை ஆணையர், நில நிர்வாகத்துறை ஆணையர் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்/துணைச் செயலர் உள்ளிட்டோர் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சிவந்தி ஆதித்யன் பாலசுப்பிரமணியன் (தினத்தந்தி), ஆர்.எம். ஆர். ரமேஷ் (தினகரன்), பி.கோலப்பன் (தி இந்து), எஸ்.கவாஸ்கர் (தீக்கதிர்), எம். ரமேஷ் (புதிய தலைமுறை), லட்சுமி சுப்பிரமணியன் (தி வீக் வார இதழ்) ஆகியோர் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அரசாணையின்படி, பத்திரிகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழு கலைக்கப்படுவதுடன், பத்திரிகையாளர் நல வாரியம் புதிய நல உதவித் திட்டங்களுக்கு அமைக்கப்படும் மேற்காணும் குழுவே பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் குறித்த மனுக்களையும் பரிசீலிக்கும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும், நீதிப் பேராணை மனு என் 32091/2019-ன் மீதான மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டதாகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா செய்திகள்
India News

# நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெறப்போவதாக சொல்கிறார் முதல்வர் ஸ்டாலின்

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெறப்போகிறோம் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சென்னை - அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெற்ற நிர்வாகி திருமணத்தை முதல்வர் ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்தார். அப்போது பேசிய அவர், நாளை மறுநாள், நேற்றைய தினம் நடந்து முடிந்திருக்கும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலின் முடிவுகள் வரவிருக்கிறது. அது என்ன முடிவு என்பது எல்லோருக்கும் தெரிந்த கதைதான்.

மிகப்பெரிய வெற்றியை பெறப்போகிறோம். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அந்த வெற்றிக்கு இடையில் இந்த திருமண நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இந்த திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துவதில் நான் பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன். இங்கே அண்ணன் துரைமுருகன் உள்ளிட்ட சிலர் பேசுகிறபோது, அவர் அதிகம் பேசமாட்டார் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். என்னைப் போன்றுதான் அவரும் அதிகம் பேசமாட்டார். நானும் அதிகம் பேசமாட்டேன். இப்போதுகூட தேர்தல் நேரத்தில் காணொலிக் காட்சியில் நான் பேசி முடித்துவிட்டேன். மக்களைச் சந்திக்க வருவதற்கு தைரியம் இல்லை என்று என்னைப்பற்றி சிலர் பேசினார்கள். என்னைப் பார்த்து, மக்களைப் பார்க்க தைரியம் இல்லை என்று சிலர் சொல்கிறார்கள். எதற்காக நான் காணொலிக் காட்சியின் மூலமாக அந்தப் பிரசாரத்தை நடத்தினேன் என்று கேட்டால், கரோனா காலமாக இருக்கின்ற காரணத்தால், அந்தத் தொற்றுக்காக அரசு சில விதிமுறைகளை அறிவித்திருக்கின்ற காரணத்தால்தான், நான் நேரடியாகச் செல்லவில்லை. அதே நேரத்தில் நான் பேசிய அனைத்துக் கூட்டங்களிலும் சொன்னேன், தேர்தல் முடிந்து அதனுடைய வெற்றி விழா நடக்கின்றபோது, நிச்சயமாக உறுதியாக அனைத்து மாவட்டங்களுக்கும் நானே நேரடியாக வருவேன் என்று சொல்லி இருக்கிறேன். ஏன் வரவில்லை என்று கேட்டவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது, “மழைக்காலத்தில் நான் வெள்ளப் பகுதிகளுக்கு சென்றபோது, ஏனப்பா இப்போது வருகிறாய், உடம்பை ஏனப்பா கெடுத்துக் கொள்கிறாய்” என்று அக்கறையோடு கேட்கும் நிலையில்தான் இன்றைக்கு மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.



எனவே தேர்தல் நேரத்தில் பணியாற்றியிருக்கும் அத்தனை பேருக்கும் நான் இந்த நேரத்தில் அன்பகம் கலை அவர்களுடைய இல்ல மணவிழா நிகழ்ச்சியின் மூலமாக, என்னுடைய இதயப்பூர்வமான நன்றிகளை, பாராட்டுதல்களை வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# திருச்சியில் சிறப்பாக நடைபெற்ற தாய்மொழி தினக் கொண்டாட்டமும் "தமிழ்மாமணி" விருது வழங்கலும்



உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு அனைத்துலகத் தமிழ் மாமன்றமும், நந்தவனம் பவுண்டேசனும் இணைந்து நடத்திய முப்பெரும் விழா 21-02-2022 அன்று திருச்சி அருண் ஹோட்டலில் சிறப்பாக நடைபெற்றது.

அனைத்துலகத்தமிழ் மாமன்றத் தலைவர் முனைவர் வே.த. யோகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழக மேனாள் அமைச்சர். என். நல்லுசாமி, திருச்சி ஆத்மா மனநல மருத்துவமனை நிர்வாக இயக்குநர் கே. இராமகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர் பாவலர் கடவூர் மணிமாறன் வாழ்த்துரை வழங்கினார்.

விழாவில் சிறப்பு நிகழ்வாக தமிழ் மொழிக்காக சேவையாற்றிய கவிஞர் இரா. முருகன், பேராசிரியர் ரெ. சந்திரமோகன், கவிஞர் த. அனந்தராமன், கவிஞர் வே, கல்யாணகுமார், எழுத்தாளர் கே. நித்தியானந்த, கவிஞர் தனலெட்சுமி பாஸ்கரன், கவிஞர் தனபால், முனைவர் ஆ. முகம்மது முகைதீன் (துபாய்,), தமிழாசிரியர் டி.என். இமாஜான் (சிங்கப்பூர்) மருத்துவர் ஜெயக்குமார் பலராமன், ஆகியோருக்கு தமிழ்மாமணி விருது வழங்கப்பட்டது விரத்தமிழர் விளையாட்டுக்கழகம் சார்பில் சிறந்த சமுதாய சேவையாளர்களான சிவ. பாலமுருகன், க. திலகவதி, ரா. பரிமளாதேவி, பாலர்ஷி, செ. சரவணன் ஆசியோருக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டது

”திருச்சியில் எத்தனையோ தமிழ் அமைப்புகளும் தமிழ் அறிஞர்களும் இருக்கிறார்கள் ஆனால், நந்தவனம் சந்திரசேகரன்தான் தாய்மொழி தினத்தை இப்படிக் கொண்டாடுகிறார். இப்படியான விழாக்களை தமிழர்கள் அனைவரும் கொண்டாட வேண்டும்.

உலகில் பல நாடுகளில் தமிழர்கள் வாழ்த்தபோதும் தமிழ் பேசமுடியாமல் இருக்கிறார்கள் மியான்மர் போன்ற நாடுகளில் உள்ள குழந்தைகளுக்கு கோவிகளில் வைத்து தமிழ் சொல்லிக் கொடுக்கிறார்கள் அங்கே இராணுவ ஆட்சி நடப்பதால் மியான்மர் மொழியில்தான் படிக்க வேண்டு என்ற கட்டாயம் இருப்பதால் தாய்மொழியான தமிழை மறந்துவிடக்கூடாது என்பதற்காக அங்குள்ள தமிழ் மக்கள் தமிழைக் கற்க பல முயற்சிகள் எடுத்துவருகிறார்கள்.

ஆனால், நமக்கு அப்படியான நிலை இல்லை வளரும் தலைமுறைக்கும் நமது மொழி பற்றிய உணர்வை கொண்டு செல்லவேண்டும் என மேனாள் அமைச்சர் நல்லுசாமி தனது உரையில் குறிப்பிட்டார்”.

நிகழ்வில் வே.த. யோகநாதன் தொகுத்துள்ள ”ஒளிரும் தமிழ்” என்ற நூல் வெளியிடப்பட்டது முன்னதாக நந்தவனம் பவுண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்று நிகழ்வை ஒருங்கிணைக்க விரத் தமிழர் விளையாட்டுக்குகத் தலைவர் ஜோசப் சௌதில்குமார் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.





# திருச்சியில் 22 வயது கல்லூரி மாணவி சுயேச்சையாக வெற்றி பெற்றார்




திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் அருகேயுள்ள துவாக்குடி நகராட்சிக்குட்பட்ட 5-வது வார்டில் மொத்தம் 1,579 வாக்காளர்கள் உள்ளன. இதில், 1,057 வாக்குகள் பதிவாகி உள்ளது. தனியார் பொறியியல் கல்லூரியில் 2-ம் ஆண்டு படிக்கும் மாணவி சினேகா (22 வயது). இந்த வார்டில் சுயேச்சை வேட்பாளராக களமிறங்கினார்.

இவரை எதிர்த்து திமுக கூட்டணியில் இடம் பெற்றுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், அ.தி.மு.க, பா.ஜ.க, தே.மு.தி.க, நாம் தமிழர் உள்ளிட்ட 9 பேர் போட்டியிட்டனர். இந்நிலையில், சுயேச்சையாக போட்டியிட்ட கல்லூரி மாணவி சினேகா 495 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவருக்கு அடுத்தபடியாக அம்மா மக்கள் முன்னேற்றத்தைச் சேர்ந்த சிவக்குமார் 191 வாக்குகள் பெற்றார். அவரைத் தவிர மற்ற 7 வேட்பாளர்கள் தங்களது டெபாசிட் தொகையை இழந்துள்ளனர்.

# “ஆன்மீகக் குரு” மேல்மருவத்தூர் “அருள்மிகு அடிகளார்” அவர்களின் 82வது அவதாரப் பெருவிழா





தமிழ்நாட்டின் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தை நிறுவி சக்தி வழிபாட்டின் பெருமைகளை உலகெங்கும் பரப்பி வருகின்ற “ஆன்மீகக் குரு” அருள்மிகு அடிகளார் அவர்களின் 82வது அவதாரப் பெருவிழா எதிர்வரும் 03-03-2022 அன்று தமிழ்நாட்டின் மேல்மருவத்தூர் ஶ்ரீ ஆதிபராசக்தி ஆலயத்திலும் மற்றும் உலகெங்கும் உள்ள வழிபாட்டு மன்றங்களிலும் நடைபெறும் என்ற செய்தியை கனடாவில் உள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அலயம் சார்பான சக்திகள் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

# பயங்கரவாதத் தடைச்சட்டமும் சுமந்திரனும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக சுமந்திரனின் தலைமையில் தமிழரசுக் கட்சி ஒரு கையெழுத்து வேட்டை போராட்டத்தை நடத்தி வருகிறது. இப்போராட்டத்திற்கு மூவினத்தவர்கள் மத்தியிலும் ஆதரவு இருக்கிறது. தமிழ்ப்பகுதிகள் எங்கும் சுமந்திரனின் ஆதரவாளர்கள் பொது இடங்களில் நின்று கையெழுத்துக்களை வாங்கிவருகிறார்கள். சுமந்திரன் தென்னிலங்கையில் உள்ள பிரமுகர்களைத் தேடிச்சென்று கையெழுத்து வாங்கிவருகிறார். அவருடைய இம்முயற்சிக்கு விக்னேஸ்வரன் உட்பட கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் ஆதரவைக் காட்டியுள்ளன.

ஈஸ்டர் குண்டுவெடிப்பின் பின்னர் பயங்கரவாதத் தடைச்சட்டம் முஸ்லிம்களுக்கும் எதிராகத் திரும்பியது. அதனால் இப்பொழுது சுமந்திரனின் போராட்டத்துக்கு முஸ்லிம்கள் மத்தியிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஆதரவு காணப்படுகிறது. அதேசமயம் ஈஸ்டர் குண்டுவெடிப்பின் பின்னால் உள்ள சூழ்ச்சிகளை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டு அரசாங்கத்தோடு முரண்பட்டுக் கொண்டிருக்கும் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித்தும் அப்போராட்டத்தில் கையெழுத்து வைத்துள்ளார். அதைவிட முக்கியமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரணதுங்க கையெழுத்திட்டுள்ளார். இப்போராட்டத்திற்கு உள்நாட்டிலும் கொழும்பில் உள்ள மேற்கு நாட்டு தூதரகங்கள் மத்தியிலும் உலகெங்குமுள்ள மனித உரிமை அமைப்புக்கள் மத்தியிலும் ஆதரவு உண்டு.

இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டம் முக்கியத்துவமானது. ஜெனிவா கூட்டத்தொடர் இம்மாத இறுதியில் தொடங்குகிறது. அதேசமயம் வரும் ஏப்ரல் மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் கூடும். அதில் இலங்கை அரசாங்கத்துக்கு ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதா இல்லையா என்ற முடிவு எடுக்கப்பட இருக்கிறது. இம்முடிவு பயங்கரவாத தடைச் சட்டத்தோடு தொடர்புடையது. பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்க வேண்டும் அல்லது அதை அனைத்துலகத் தரத்துக்கு ஏற்ப மாற்ற வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கேட்கின்றது. அதை ஒரு முன் நிபந்தனையாக முன்வைக்கின்றது. அதனால் அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் திருத்தப்பட்ட வடிவம் ஒன்றை கொண்டு வரப்போவதாகக் கூறிக் கொண்டிருக்கிறது. ஆனால் திருத்தப்பட்ட அந்த வடிவத்தையும் மனித உரிமை அமைப்புகள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. முஸ்லிம் அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினரும் சட்ட விற்பன்னர்களும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அகற்றக்கோரி சுமந்திரன் தொடங்கியிருக்கும் கையெழுத்து வேட்டை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை அமைப்புக்கள் போன்றவற்றின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. இப்படி ஒரு நேரத்தில் இப்படி ஒரு போராட்டத்தை சுமந்திரன் தலைமையில் தமிழரசுக்கட்சி முன்னெடுப்பதை ஆதரிக்க வேண்டும். ஆனால் அதே சமயம் சில அடிப்படைக் கேள்விகளையும் இங்கே கேட்க வேண்டும்.

முதலாவது கேள்வி, தமிழரசுக்கட்சி, கடந்த ஆட்சியின் போது ரணில் - மைத்திரி அரசாங்கத்தின் மறைமுகப் பங்காளியாக இருந்தது. மிகக் குறிப்பாக மைத்திரிபால சிறிசேன ஒரு யாப்புச் சதி முயற்சியை முன்னெடுத்த பொழுது ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்தது சுமந்திரனே என்று பாராட்டப்பட்டது. அதாவது இலங்கைத்தீவின் ஜனநாயகத்தை பாதுகாத்தவர் என்று அவருக்கு மகுடம் சூட்டப்பட்டது. அந்தளவுக்கு தென்னிலங்கை அரசியலை தீர்மானிக்கும் சக்தியோடு காணப்பட்ட சுமந்திரனும் கூட்டமைப்பும் அந்த ஆட்சிக் காலகட்டத்திலேயே ஏன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க முயற்சிக்கவில்லை? அதுதொடர்பாக ரணில்-மைத்திரி அரசாங்கத்தின் மீது ஏன் நிர்ணயகரமான விதங்களில் அழுத்தத்தைப் பிரயோகிக்கவில்லை? ஆட்சியின் மறைமுகப் பங்காளிகளாக இருந்த காலகட்டத்தில் செய்யத் தவறிய ஒன்றை ஏன் இப்பொழுது செய்கிறார்கள்?

இது தொடர்பில் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடந்த மைத்திரிபால சிறிசேனவின் கட்சி மாநாட்டில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் சுட்டிக்காட்டியிருக்கிறார். அங்கஜன் அதை சுமந்திரனுக்கு எதிரான குற்றச்சாட்டாக முன்வைக்கிறார். ஆனால் அப்போது ஆட்சியில் இருந்தது அவரும் அங்கம் வகித்த ஓர் அரசாங்கம்தான். எனவே முடிவெடுக்கும் நிலையில் இருந்தது மைத்திரியும் அவருடைய அரசாங்கமும்தான். எனவே இதில் முதல் குற்றச்சாட்டு மைத்திரிபால சிறிசேனவின் கட்சியை நோக்கித்தான் முன்வைக்கப்பட வேண்டும். அங்கஜன் சுமந்திரன் மீது பழியைப் போட்டுவிட்டு அவர் தப்ப முடியாது.

இரண்டாவது கேள்வி, இதில் சந்திரிக்கா போன்றவர்கள் கையெழுத்து வைத்திருக்கிறார்கள். இதுவிடயத்தில் சந்திரிகாவிடம் மனமாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என்ற ஒரு விவாதம் முன்வைக்கப்படலாம். எனினும் 10 ஆண்டுகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த ஒருவர், தான் செய்யத் தவறிய ஒன்றை இப்பொழுது செய்ய வேண்டும் என்று கூறுவதை எப்படி விளங்கிக் கொள்வது? தான் அதிகாரத்தில் இருந்தவரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இன்றுவரை சிறையில் இருப்பவர்களுக்கு அவர் பதில் கூறுவாரா? இது ஒரு அடிப்படையான கேள்வி.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் கருத்துக்கூறும் பலரும் அதிகாரத்தில் இருந்து ஓய்வு பெற்றபின் தமிழ்மக்களின் நியாயங்களை கதைப்பதை நாம் பார்க்கிறோம். உள்நாட்டு அரசியல்வாதிகள் உள்ளடங்கலாக வெளிநாட்டு ராஜதந்திரிகள் அரசுத் தலைவர்கள் பலரும் அவ்வாறு கருத்து தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக இந்திய ராஜதந்திரிகள் பலர் அவ்வாறு தவறு நடந்துவிட்டது என்பதனை ஓய்வு பெற்ற பின்னர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதுபோலவே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் ஓய்வு பெற்றபின் ஈழத் தமிழர்களுக்கு சாதகமான உண்மைகளை தனது சுயசரிதையில் எழுதியிருக்கிறார். படியாக இலங்கை இனப்பிரச்சினையில் தாம் பதவியில் முடிவெடுக்கும் அதிகாரத்தில் இருந்தபோது முடிவெடுக்காத பலரும் ஓய்வூதியர்கள் ஆனபின் ஞானம் பெற்று நீதிக் கதைகளை எழுதுகிறார்கள். திருமதி சந்திரிகாவின் விடயமும் அத்தகையதே. அவருடைய கைகளிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் கண்ணீரும் ரத்தமும் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

மூன்றாவது கேள்வி ஏற்கனவே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் ஏனைய கட்சிகளுமாக மொத்தம் 5 கட்சிகள் இணைந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான ஒரு கூட்டுக்கடிதத்தை தயாரிக்கப்போவதாக அறிவித்திருந்த ஒரு பின்னணியில் சுமந்திரன் இதுவிடயத்தில் தனி ஓட்டம் ஓடக் காரணம் என்ன? குறிப்பாக இந்தியாவுக்கு கடிதம் எழுதும் விடையத்தில் சுமந்திரனும் கடைசி கட்டத்தில் அதில் பங்காளியாக மாறினார். இப்போது அதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல அவர் காட்டிக் கொள்கிறார். ஆனால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட இறுதி ஆவணத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பலவற்றுக்கு அவரும் பொறுப்பு. எனவே ஒரு புறம் ஆறு கட்சிகளோடு இணைந்து ஒரு கூட்டு ஆவணத்தை தயாரித்த ஒருவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான ஒரு போராட்டத்தில் ஏனைய ஐந்து கட்சிகளையும் அரவணைத்து தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்சம் திரளாக மாற்ற வேண்டும் என்று சிந்திக்காதது ஏன்?

கடந்த 16ஆம் திகதி யாழ் நல்லூரில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் இந்தியாவுக்கு கடிதத்தை அனுப்பிய ஆறு கட்சிகள் இணைந்து ஒரு கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியிருந்தன. அக்கருத்தரங்கில் தமிழரசுக் கட்சி பங்குபற்றவில்லை. அதன் தலைவர் உடல்நலக் குறைபாடு காரணமாக வரவில்லை என்று கூறப்பட்டது. அப்படி என்றால் ஒரு பிரதிநிதியை அனுப்பி இருந்திருக்க வேண்டும். அதுவும் நடக்கவில்லை. கருத்தரங்கில் தமிழரசுக்கட்சியின் ஆதரவாளர்களையும் காண முடியவில்லை. ஆனால் அதே நாளில் காலையில் யாழ் நகரப் பகுதியில் நடந்த சுமந்திரனின் கையெழுத்து வேட்டைப் போராட்டத்தில் முதல் ஆளாக மாவை தனது கையெழுத்தை வைத்திருக்கிறார். இது உள்நோக்கமுடையது இல்லையா?

தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. தாம் அதிகாரத்தில் இருந்த காலகட்டத்தில் அல்லது அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்திகளாக இருந்த காலகட்டத்தில் நீக்கத் தவறிய ஒரு சட்டத்துக்கு எதிராக இப்பொழுது தமிழரசுக்கட்சி போராளி வேடம் பூண்டிருக்கிறது. அதேசமயம் ஏனைய கட்சிகளோடு இணைந்து கூட்டாக இந்தியாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பி விட்டு அதை அனுப்பிய கையோடு தனியாக ஒரு போராட்டத்தை முன்னெடுக்கின்றது. இந்தப் போராட்டத்தில் திருமதி சந்திரிக்காவையும் கர்தினால் மல்கம் ரஞ்சித் தையும் இணைப்பதற்கு முதலில், கூட்டமைப்புக்குள் உள்ள பங்காளிக் கட்சிகளையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட எல்லாக் கட்சிகளையும் சிவில் அமைப்புக்களையும் ஓரணியில் திரட்டி ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கியிருந்திருக்க வேண்டும். அதன் பின்னரே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருக்க வேண்டும். அவ்வாறு ஒரு பொதுக்கட்டமைப்பு இன்றி முன்னெடுக்கப்படும் இதுபோன்ற எல்லா போராட்டங்களும் இறுதியிலும் இறுதியாக தமிழ் மக்களை கட்சிகளாகப் பிரிக்கும் போராட்டங்களே. தேசமாக திரட்டும் போராட்டங்கள் அல்ல.

---

**வீணாவின் கவிக்கணை**

பிரச்சனை!
இது இல்லாத மானிடரும்
உண்டோ இப்பூமியில்?
மன அசதியோ, உடல்
அசதியோ, எது வந்த போதும்,
நம் வலிமை என்னவென்று
நாம் அறிந்துகொள்ளவும்,
நமக்காக துணைவருபவர்
யார்யார் என்பதறியவும்,
நமக்கு நாமே பாடமாய்
இருக்கவும், இறைவனால்
இயக்கப்படும் நாடகமும் இதுவே,
தொடங்கிய தொடர், ஒருநாள்
முடிவுக்கு வருகையில் முழுதாய்
நீயும் உன்னை உணர்ந்திருப்பாய்.

# SL Under Scanner as it Faces a Tough Time in UNHRC

- Siva Parameswaran, Senior International Journalist London




"Sri Lanka's Prevention of Terrorism Act (PTA) has been used for over 40 years to enable prolonged arbitrary detention, to extract false confessions through torture, and to target minority communities and civil society groups" - a leading International Human Rights watchdog has said.

The condemnation from Human Rights Watch (HRW) has put Sri Lanka in a tight spot as the annual session of the UN Human Rights Commission is to begin in Geneva on 28th February.

Sri Lanka had given a commitment to the international bodies including the UNHRC last year to improve its Human Rights record only to disappoint them. Critics say the government has not enough to convince the international community that it's acting positively and moving forward to implement the commitments given.

Hoping the Government of Sri Lanka (GOSL) would honour its word, UNHRC offered time to the island nation in a move to bring tighter sanctions and tough regulations on human rights conditions and alleged war crimes perpetuated by the state.

After years of domestic and international criticism of the law, President Gotabaya Rajapaksa on January 27, 2022, published a bill to amend the act- well over 10 months after the last session of the UNHRC. However, the proposed amendments leave the most often abused provisions of the law intact, and if enacted, will do little to bring the PTA into compliance with Sri Lanka's international human rights obligations, according to HRW.

While the demand locally and internationally is for repealing the draconian PTA, the GOSL has opted to make amendments to it.






Even if the amendments are adopted, the PTA would still not meet any of the five "necessary prerequisites" described by seven United Nations special rapporteurs in December 2021 to comply with international human rights standards.

The PTA was enacted in 1979 as a temporary measure when it was presented in parliament, debated, and enacted all in one day. It allows the authorities to carry out arrests without warrant for unspecified "unlawful activities," and permits detention for up to 18 months without producing the suspect before a court.

Brought by the 'willy fox' J R Jayawardena - the country's first executive president after he won a landslide majority in the 1978 parliamentary elections, it was used by the state to subjugate the Tamils particularly under the guise of taming the armed groups who were waging a war for a separate homeland in the North East of the country. However, subsequent government citing the war bogey were unwilling to repeal it and 'for politics of convenience' it suited them.

However, the demand the abolish the PTA has been growing since the brutal civil war came to an end in May 2009.

Many suspects have been held on remand for years awaiting trial.

Statistics indicate that most are tortured in custody, and convictions frequently rely on confessions obtained under torture. "During this 18-month period you are at the mercy of whichever security agency is detaining you," a defence lawyer in numerous PTA cases told Human Rights Watch.

Ever since Gotabaya Rajapaksa won the presidential election in November 2019, his administration has used the PTA to target perceived political opponents and members of the minority Tamil and Muslim communities. The Rajapaksa regime has been accused of gross human rights violations, human rights activists and lawyers, journalists, and members of civil society groups being arrested under the guise of countering terrorism-HRW has pointed out in its report.

A human rights activist based in the North and working with the war affected Tamil community told HRW, "They are using PTA to create fear among activists. When we talk to the families of the disappeared, they say they can be arrested at any time. Police are arresting people for posting pictures on Facebook. They can arrest you for anything".

The Rajapaksa government has rejected pledges by the previous administration of Maithripala Sirisena to repeal the law. Instead, it has used the PTA to target religious and ethnic minorities, fuelling concerns the government aims to further institutionalize




Sinhala Buddhist nationalism in keeping with President Rajapaksa's ethnically divisive campaign rhetoric. He has also promised to strengthen the country's abusive intelligence agencies and protect military commanders he calls "war heroes" from war crimes prosecutions.

A year ago, in January 2021 the Rajapaksa government pledged to review abusive provisions of the PTA, which is a key condition of Sri Lanka's tariff-free trading access (GSP+) to the European Union.

"The Prevention of Terrorism (Temporary Provisions) Act of 1979 Amendment Bill (the "Amendment Bill"), published in January 2022, includes revisions that could reduce some abuses under the law, such as shortening, from 18 to 12 months, the period a suspect can be held without judicial oversight. But this still violates the prohibition against arbitrary detention" - a human rights activist told HRW.

The Amendment Bill does not provide a definition of terrorism, as called for by United Nations experts to help prevent the PTA's widespread misuse. The bill does not alter the sweeping powers the law gives to authorities to charge people with speech-related offenses: authorities can still arrest anyone deemed to be causing or intending to cause "racial or communal disharmony or feelings of ill will or hostility between different communities or racial or religious groups." This proviso was used to arbitrarily arrest teachers, literary personalities, lawyers among others.


Crucially, the Amendment Bill does not change the status of confessions given to the police as evidence in PTA cases. While such evidence is inadmissible under other Sri Lankan laws, it is admissible under the PTA. This has led the police to routinely use torture and other ill-treatment to extract confessions from PTA prisoners. Furthermore, the bill does not remove the authority from officials to move and keep a suspect in "any place for the purpose of interrogation," which has repeatedly been used to facilitate torture and increases the risk of enforced disappearance.

Amidst mounting economic crisis and internal turmoil brewing, GOSL is on a sticky wicket. The early it repeals the PTA it's good for the nation and the people.



உலக செய்திகள்
World News

# உக்ரைனில் சிக்கித்தவிக்கும் மாணவர்களையும், பொதுமக்களையும் சிறப்பு விமானம் மூலம் மீட்க வேண்டும்!



போர் தொடங்கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டில் சிக்கித்தவிக்கும் தமிழ்நாட்டு மாணவர்களையும், பொதுமக்களையும் சிறப்பு விமானம் மூலம் பாதுகாப்பாக மீட்டுக்கொண்டுவர இந்திய ஒன்றிய அரசும் தமிழ்நாட்டு அரசும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்! - நாம் தமிழர் கட்சி சீமான் வலியுறுத்தல்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, உக்ரைன் மீது ரசியா போர்த்தாக்குதல்களைத் தொடங்கியுள்ள நிலையில், அங்குத் தங்கி படித்து வரும் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் சிக்கித் தவித்து வருவது மிகுந்த வேதனையளிக்கிறது.

போர்த் தொடங்குவதற்கு முன்பே தங்கள் குழந்தைகளை மீட்க வேண்டிப் பெற்றோர்கள் பலமுறை கோரிக்கை விடுத்தும், மாணவச் செல்வங்களைப் பாதுகாப்பாக மீட்டுக்கொண்டுவராததுடன், மாணவர்களின் நிலைகுறித்து உரிய பதிலும் அளிக்காது, மெத்தனமாகச் செயல்படும் இந்தியத் தூதரகத்தின் அலட்சியப்போக்கும், இந்திய ஒன்றிய அரசின் பாராமுகமும் வன்மையான கண்டனத்திற்குரியது.

தாங்கள் ஈன்றெடுத்து வளர்த்த அன்பு பிள்ளைகள் சொந்த நாட்டில் உயர்கல்வி படிக்கும் வாய்ப்போ, வசதியோ கைவரப் பெறாத நிலையிலேயே கல்வி உதவித்தொகை மூலம் அயல்நாடு அனுப்பிப் படிக்க வைக்கின்றனர். தற்போது அவர்களது உயிர் பாதுகாப்பே கேள்விக்குறியாகியுள்ள நிலையில் மாணவர்களின் பெற்றோர்களும், குடும்பத்தினரும் மன அமைதி இழந்து தவித்துவருகின்றனர்.

போர்ச்சூழலால் உக்ரைன் நாட்டு அரசு தனது வான்பரப்பு சேவைகளை முடக்கியுள்ளதால், இன்று இந்திய ஒன்றிய அரசால் அனுப்பப்பட்ட விமானம் திருப்பி அனுப்பப்பட்டதையடுத்து உக்ரைன் நாட்டிலிருந்து இந்திய ஒன்றியத்தைச் சேர்ந்த மாணவர்களும், பொதுமக்களும் வெளியேற முடியாமல் தவித்துவருகின்றனர்.

ஆகவே, இந்திய ஒன்றிய அரசு நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து உக்ரைன் நாட்டில் சிக்கியுள்ள மாணவர்கள் மற்றும் பொதுமக்களை வெளியேற ஏதுவாகச் சிறப்பு அனுமதி பெற்று, தமது சொந்த செலவில் சிறப்பு விமானம் மூலம் தாயகம் மீட்டு அழைத்துவர உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். தமிழ்நாடு அரசு, இந்திய வெளியுறவுத்துறை மற்றும் உக்ரைன் நாட்டிற்கான இந்தியத் தூதரகத்தை உடனடியாகத் தொடர்புகொண்டு விரைவாக தமிழ்நாட்டு மாணவர்களும், பொதுமக்களும் மீட்கப்படுவதை உறுதி செய்ய வேண்டுமென்றும் நாம் தமிழர் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# "ரஷ்யா மீதான மேற்குலக நாடுகளின் பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ள நாம் தயார்"

## உக்ரைன் மீதான உக்கிரமான தாக்குதல்களை நடத்திய வண்ணம் புட்டினின் திமிர்ப் பேச்சு

உலகப் பொருளாதாரத்தில் ரஷ்யா ஒரு முக்கிய அங்கமாக இருப்பதால், உலகப் பொருளாதார அமைப்பை நாங்கள் பாதிக்க விரும்பவில்லை. எவ்வாறு இருப்பினும் ரஷ்யா மீதான மேற்குலக நாடுகளின் பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ள தாம் தயாராக இருப்பதாகவும் திமிராகப் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார் ரஷ்ய அதிபர் புட்டின்.

உக்ரைன் மீதான மனித நேயமற்ற உக்கிரமான தாக்குதல்களை நடத்திய வண்ணம் அவர் ரஸ்யாவின் தலைநகர் மொஸ்கோவிலிருந்து தொலைக்காட்சி ஒன்றின் ஊடாக நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவிக்கையில் உலகப் பொருளாதார அமைப்பை உடைக்க ரஷ்யா என்றுமே விரும்பவில்லை என்றும் புட்டின் குறிப்பிட்டார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின், உக்ரைன் மீதான படையெடுப்பு குறித்து மாஸ்கோவில் உள்ள உயர்மட்ட வணிகத் தலைவர்களுடனும் ஆலோசனை நடத்தினார். அப்போது பேசிய அவர், ரஷ்யாவின் பாதுகாப்பு அச்சுறுத்தல் மிக அதிகமாக இருப்பதால், வேறு எந்த வகையிலும் பதில் அளிக்க இயலாது என்று விளக்கினார்.



அவர் உக்ரைன் மீதான படையெடுப்பை "தேவையான நடவடிக்கை" என்றும் விவரிக்கத் தவறவில்லை உக்ரைன் மீதான தாக்குதலானது உலகளாவிய சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கம் கொண்டதல்ல என்றும் புடின் கூறினார்.

உலகப் பொருளாதாரத்தில் ரஷ்யா ஒரு முக்கிய அங்கமாக இருப்பதால், உலகப் பொருளாதார அமைப்பை தகர்ப்பதற்கு நாங்கள் விரும்பவில்லை. என்றும் புட்டின் கூறினார்.

# உக்ரைன் மீது மோசனமான தாக்குதல்களை நடத்தும் புட்டின் இனிமேல் உலக அரங்கில் தனிமைப்படுத்தப்படுவர் என்கிறார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன்



உக்ரைன் மீது திட்டமிட்டு தாக்குதலை நடத்தியுள்ள ரஷ்யா மற்றும் ரஷ்யா தேசத்தின் அதிபர் விளாதிமிர் புட்டின், இனிமேல் உலக அரங்கில் தனிமைப்படுத்தப்படுவர் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பகிரங்க அறிவிப்பொன்றினை வெளியிட்டுள்ளார்.

உக்ரைன் எல்லைகளில் படைகளை குவித்து கடந்த ஒரு மாத காலமாக எச்சரித்து வந்த ரஷ்யா, நேற்று முன்தினம் அதிகாலையில் உக்ரைன் மீது வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி என மும்முனை தாக்குதலை நடத்தி போரை தொடங்கியது. இந்த தாக்குதல் தொடர்பாக வெள்ளை மாளிகையில் நடைபெற்ற பத்திரிகையாளர்களின் சந்திப்பில் பைடன் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

இந்நிலையில், இதற்கு உலக நாடுகள் பல கடும் எதிர்ப்பினை வெளியிட்டு வரும் நிலையில், ரஸ்யாவிற்கு எதிராக அமெரிக்கா பகிரங்க அறிவிப்பொன்றினை வெளியிட்டுள்ளது.

உக்ரைன் மீது திட்டமிட்டு தாக்குதலை நடத்தியுள்ள ரஷ்யா மற்றும் ரஷ்யா அதிபர் விளாதிமிர் புட்டின், இனி உலக அரங்கில் தனிமைப்படுத்தப்படுவர் என்றும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பகிரங்க அறிவிப்பொன்றினை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ரஷ்யா மீதான அமெரிக்காவின் நடவடிக்கைகளை விவரித்துள்ளதுடன், ரஷ்யாவின் செயல்பாடுகளையும் கடுமையாக விமர்சித்து ரஷ்யாவிற்கு எதிராக பல தடைகளையும் விதித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ரஷ்யா மீது நீண்டகால தாக்கத்தை அதிகரிக்கவும், அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் மீதான அதன் தாக்கத்தை குறைக்கவும் வலுவான தடைகளை இனி விதிக்கவிருக்கிறோம்.

டொலர்கள், யூரோக்கள், பவுண்டுகள், யென் போன்றவை மூலம் வணிகம் செய்யும் ரஷ்யாவின் திறனைக் கூட்டாகக் கட்டுப்படுத்த முடிவெடுத்த பு7 தலைவர்களுடன் தாமும் உடன்படுகின்றாம்.

ரஷ்யாவின் நிதியுதவி மற்றும் ராணுவத்தை வளர்க்கும் திட்டங்களை இனிமேல் அமெரிக்கா தடுத்து நிறுத்தும். 21ஆம் நூற்றாண்டின் உயர் தொழில்நுட்ப பொருளாதாரத்தில் போட்டியிடும் ரஷ்யாவின் திறனை இந்த தடைகள் எமது எதிர்கால நடவடிக்கைகளால் தகர்தெறியப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ரஷ்ய ரூபிள் பண மதிப்பு மிக, மிக மோசமான நிலையை அடையும். ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு பிறகு ரஷ்ய பங்குச் சந்தை இன்று வீழ்ச்சியடைந்துள்ளது.

"ஒரு ட்ரில்லியன் டாலர்கள் அளவுக்கு சொத்துக்களை வைத்திருக்கும் ரஷ்ய வங்கிகள் மீது இப்போது தடைகளை விதிக்கிறோம்.

"நாங்கள் ரஷ்யாவின் மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றை ஏற்கெனவே சர்வதேச நிதி விவகாரங்களில் தலையிடாத வகையில் துண்டித்துவிட்டோம். அந்த வங்கியானது ரஸ்ய தேசத்தின் வங்கிச் சொத்துக்களில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது," என்றும் பைடன் செய்தியாளர்களிடம் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

# ரஸ்யப் படைகளின் அகோரத் தாக்குதல்களால் உக்ரைனின் அப்பாவிகளும் உயிரிழக்கும் கொடுமைகள் அரங்கேறுகின்றன

அதிபர் புட்டின் அனுப்பி வைத்த ரஸ்யப் படைகளின் அகோரத் தாக்குதல்களால் உக்ரைனின் அப்பாவிகளும் உயிரிழக்கும் கொடுமைகள் அரங்கேறுகின்றன என அங்கிருந்து கிடைக்கும் செய்திகளும் ஒளிப்படங்களும் சாட்சியம் கூறுகின்றன என அறிவிக்கப்படுகின்றது.

வியாழக்கிழமை உக்ரைனில் 130-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் மற்றும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினின் "கொடூரமான மற்றும் காட்டுமிராண்டித்தனமான" படையெடுப்பினால் உக்ரைனில் உயிரிழப்புகள் அதிகரித்துவருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இராணுவ இலக்குகளை மட்டுமே தாக்குவதாக ரஷ்யா பொய்யான அறிக்கைகளை தொடர்ச்சியாகக் கூறினாலும், பொதுமக்களின் தளங்களும் தாக்கப்பட்டதாக உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.



"ரஷ்யர்கள் அப்பாவி மக்களைக் கொல்கிறார்கள் மற்றும் அமைதியான நகரங்களையும் இராணுவ இலக்குகளாக மாற்றுகிறார்கள். இது தவறானது மற்றும் ஒருபோதும் மன்னிக்கப்படாது" என்று அவர் கூறினார்.



மேலும், ரஷ்யா முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கிய பின்னர், இதுவரை குறைந்தது 137 பேர் - வீரர்கள் மற்றும் பொதுமக்கள் இறந்துள்ளனர் என்று உக்ரைன் அதிபர் கூறியுள்ளார். மேலும் 316 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர் கூறினார். கார்கிவ் பகுதியில் அடுக்குமாடி கட்டிடத்தில் ரஷ்ய படை ெ‘ல் தாக்குதல் நடத்தியதில் ஒரு சிறுவன் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறான கட்டடங்கள் பலவும் தாக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

# "எமது தாய் மண்ணில் இடம்பெறும் இந்த உயிர்காக்கும் நற்பணிக்கு நீங்களும் பங்களிக்கலாம்"

## கனடா "நிவாரணம்" அமைப்பின் நிறுவனர் செந்தில் குமரன் வேண்டுகோள்




யாழ்ப்பாணம் மட'டுவில், சாவகச்சேரியை சேர்ந்தவரும் 21 வயதுடையவருமான செல்வன் நிஷாவுகேசன் என்னும் இளைஞர் அவசரமாக இருதய சத்திர சிகிச்சை செய்வதற்காக கொழும்பிலுள்ள லங்கா மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய கட்டாயம் காரணமாக கனடா செந்தில் குமரன் அவர்களின் "நிவாரணம்" அமைப்பு வழமைபோல இந்த உயிர் காக்கும் பணிக்காக உதவிக் கரம் நீட்டியது.

அதனால் செல்வன் நிஷாவுகேசனின் இருதய சத்திர சிகிச்சையும் வைத்தியசாலை பூரண வெற்றியோடு நடந்தேறியது. இந்த இளைஞனின் உயிரினை காக்க அதற்கான முழு செலவினையும் தானம் தந்த திரு.திருமதி. ஷாஜி நடா (Ideal Group) அவர்களுக்கு தாயக மக்களின் சார்பில் கோடான கோடி நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம். இந்த இருதய சத்திர சிகிச்சைக்காக சுமார் 9 இலட்சம் இலங்கை ரூபாய்கள் வைத்தியசாலைக்கு செலுத்தப்பட்டுள்ளதற்கான பற்றுச் சீட்டுக்கள் மற்றும் அந்த தொகை வைத்திய சாலைக்கு அனுப்பப்பெற்றமைக்கான Remitbee Money Transfer பற்றுச் சீட்டுக்கள் ஆகியன இங்கே இணைக்கப்பட்டுள்ளன.



மேலும், எதிர்வரும் கிழமைகளில் நடக்கவிருக்கும் இரு சிறு மழலைகளின் இதய சத்திர சிகிச்சைகளுக்கு திரு.திருமதி. ஷாஜி அவர்கள் பொறுப்பேற்க உள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் அறிய தருகின்றார்கள் "நிவாரணம்" அமைபப்பினர்.




நிஷாவுகேசன் நலம் பெற இறைவனை வேண்டும் அதே நேரத்தில், இந்த சத்திர சிகிச்சைக்காக தங்கள் நேரத்தினை இலவசமாக தந்துதவிய இதய அறுவை சிகிச்சை நிபுணர் காந்திஜி மற்றும் குழுமத்தினர், வைத்திய கலாநிதி குருபரன், ஷாஜி குடும்பத்தினர் அனைவர்க்கும் இறைவனின் முழு ஆசிகள் கிடைக்க வேண்டுமென்றும் வேண்டுகிறேன்! நிஷாவுகேசனின் தாயாரின் கண்ணீர் கல்லையும் கரைய வைக்கும்! இவரை போல பல தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளின் உயிர்களை கையில் பிடித்து கொண்டு மருத்துவமனைகளுக்கும் கோவில்களுக்கும் அலைந்து கொண்டு, ஏதேனும் ஓர் உதவி கிட்டிடாதா என்று ஏக்கத்துடன் - உடம்பில் சோர்வுடனும், மனதில் வலியுடனும் நாட்களை கழித்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் எனக்கு 3 கோரிக்கைகளாவது வருகிறன. எல்லாவற்றினையும் ஏற்று செய்ய இயலாது என்றாலும், உயிராபத்தில் இருக்கும் நோயாளிகளை முடிந்தவரை எடுத்து காப்பாற்றி வருகிறோம். இதற்கு ஆதரவு அளிக்கும் அத்தனை உள்ளங்களுக்கும் நன்றி. எமது தாய் மண்ணில் இடம்பெறும் இந்த உயிர்காக்கும் நற்பணிக்கு நீங்களும் பங்களிக்கலாம். பங்களிக்கும் 100 வீதமும் திட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதற்கான அத்தாட்சிகள் பகிரப்படும். www.Nivaranam.com

இவ்வாறு கனடா "நிவாரணம்" அமைப்பின் நிறுவனர் செந்தில் குமரன் அறிவித்துள்ளார்.

**- Arjune**

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

(Registered as a non profit organization in Canada, No:001100556)

*February 22, 2022*

## ***POSTPONEMENT OF MAHAJANAN CONTEST-2022***

*At a time of the mixed messages of corona-virus pandemic and the variants , We have to rethink our arrangements for "MAHAJANAN CONTEST - 2022" which is originally scheduled take place on March 6, 2022.*

*In light of potential current and future limitations on large gatherings, travel restrictions and the risk that venues selected for the contest may cease to be available due to unexpected closure, we are obligated to postpone and redesign the "MAHAJANAN CONTEST - 2022" to an online format which corresponds to the current trend.*

*Based on the suggestions at a virtual meeting with the our Executive committee. we have agreed to put off the "MAHAJANAN CONTEST - 2022" and we will communicate with you as soon as initialisation of proposed online format is being set-up .*

*Further, we will do all possible efforts to plan and conduct the "MAHAJANAN CONTEST - 2022" in a very competitive way to satisfy the proposed online format design at the earliest possible time before end of 2022.*

*We Will communicate to you as soon as the appropriate format is finalized.*

*Thank your understanding, support and patronage.*

C. Buvanasandra
President

N. Thanapal
Secretary

3852 Finch Avenue East, Unit G03, Scarborough, Ontario, M1T 3T9, Canada
+1.647.849.2507; www.mahajana.ca; www.mahajanan.org

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**




கனடா வாழ் ரசிகர்களுக்காக யாழ் மண்ணிலிருந்து ஒரு திரைப்படம்

யாழ் திரையரங்குகளில் வெற்றி நடை போட்ட 'எங்கட படம்'

எழுத்தும் இயக்கமும்: ராஜ் சிவராஜ்

Scarborough NETWYN அரங்கில்
Netwyn.Place
10 Thornmount Drive
M1B 3J4 (Morningside-Sheppard சந்திக்கு அருகில்)

ஏப்ரல் 9ம் திகதி மூன்று காட்சிகளாக:

பிற்பகல் 2:00 மணி - VIP காட்சி
மாலை 4.00 மணி மற்றும்
மாலை 6.00 மணி காட்சிகள்

அனுமதி:

4:00 மணி
6:00 மணி காட்சிகளுக்கு
$10 மட்டுமே

தொடர்புகளுக்கு: (416) 732-1608 | (647) 770-7482 | (416) 669-6437



Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.



Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.



பனங்கருப்பட்டி



தேன் நெல்லி

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.







காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# தமிழக உள்ளாட்சித் தேர்தலில் பாஜகவுக்கு ஆதரவு அதிகரிப்பு: அதிமுகவுக்கு பெரும் தோல்வி



தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கான முடிவுகள் வெளியாகின. இதில், மொத்தமுள்ள 1,374 மாநகராட்சி வார்டுகளில் 161, மூன்று ஆயிரத்து 843 நகராட்சிகள் வார்டுகளில் 638, ஏழு ஆயிரத்து 621 பேரூராட்சி வார்டுகளில் 1,206 வார்டுகளை மட்டுமே அதிமுக கைப்பற்றியுள்ளது. ஒரு மாநகராட்சி மேயர் பதவியைக்கூட அதிமுகவால் கைப்பற்ற முடியாமல் பின்னடைவை சந்தித்துள்ளது. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் 2019ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி 38 இடங்களிலும், அதிமுக ஒரு தொகுதியிலும் மட்டுமே வென்றறன.

அதே ஆண்டு நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் 214 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களையும், 1,792 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களையும் அதிமுக பெற்றது. ஆனால், எதிர்க்கட்சியாக இருந்த திமுக, அதிமுகவைவிட கூடுதல் வாக்குகளைப் பெற்று, 244 மாவட்ட உறுப்பினர்களையும், 2,095 ஒன்றிய உறுப்பினர்களையும் பெற்றது.முன்னதாக, 2011ல் நடைபெற்ற ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் 10 மாநகராட்சிகள், 89 நகராட்சிகள், 285 பேரூராட்சிகள், 566 மாவட்ட ஊராட்சி வார்டுகள், 3,727 ஊராட்சி ஒன்றியங்களை அதிமுக வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. அதிமுகவின் இந்த சரிவுக்கு சசிகலாவிவகாரம், ஒற்றைத் தலைமை கோரிக்கை, கோஷ்டி பூசல் உள்ளிட்டவை காரணங்களாக கூறப்பட்டன. ஆனால், இதை சரி செய்ய தீவிர நடவடிக்கைகளை அதிமுக தலைமை மேற்கொள்ளவில்லை என்ற அதிருப்தியில் நிர்வாகிகள் இருந்ததாகக் கூறப்பட்டது.2021 சட்டப்பேரவைத் தேர்தலை பாஜக, பாமக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளுடன் சந்தித்த அதிமுக, 66 தொகுதிகளில் மட்டுமே வென்று, ஆட்சியை இழந்தது.புதிதாகப் பொறுப்பேற்ற திமுக அரசு 9 மாவட்டங்களுக்கான உள்ளாட்சித் தேர்தலை 2021ல் நடத்தியது. அப்போது, வெறும் 2 மாவட்ட ஊராட்சி வார்டுகளை மட்டுமே அதிமுக பெற்றது.

திமுக 139 உறுப்பினர்களை அள்ளியது. இந்நிலையில், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டது. பொங்கல் பரிசுத் தொகுப்பு பொருட்களில் திமுக அரசு ஊழல் செய்துள்ளதாகவும், தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்ற வில்லை என்றும் அதிமுக பிரச்சாரம் செய்தது. ஆனால், இந்த தேர்தலில் திமுக கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது. அதிமுகவின் தொடர் பின்னடைவு தொண்டர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கட்சியின் நிலைமையைச் சரிசெய்ய தீவிர நடவடிக்கைகள் வேண்டும் என்றும் கோரிக்கை வலுத்துள்ளது.

2019ல் அதிமுக ஆளும் கட்சியாக இருந்தபோதே நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை நடத்தியிருந்தால் கணிசமான தலைவர் பதவிகளை கைப்பற்றி இருக்கலாம் என்றும் கட்சி நிர்வாகிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் இடம் பெற்ற பாஜக, 4 தொகுதிகளில் வென்றது. வார்டுஒதுக்கீடு செய்வதில் உடன்பாடு ஏற்படாததால் கூட்டணியில் இருந்து விலகி, நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் பாஜக தனித்துப் போட்டியிட்டது. நேற்று இரவு 7.30 மணி நிலவரப்படி, மாநகராட்சிகளில் 22, நகராட்சிகளில் 56, பேரூராட்சிகளில் 230 வார்டுகளில் பாஜக வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

மாநகராட்சிகளில் சுமார் 1.60 சதவீதம்வாக்குகளுடன் 5வது இடத்தையும், நகராட்சிகளில் 1.50 சதவீதம் வாக்குகளுடன் 4வது இடத்தையும், பேரூராட்சிகளில் 3 சதவீத வாக்குகளுடன் 4வது இடத்தையும் பிடித்துள்ளது.'தமிழகத்தில் இனி பாஜக காலம்'இதுகுறித்து பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “பாஜக மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

வரும் காலம் பாஜக காலமாக இருக்கும். அதிமுகவுடனான தேசியக் கூட்டணி தொடரும். அதிமுக பெரிய கட்சி. ஏதோ ஒரு தேர்தலில் பின்தங்கியதால், தப்புக் கணக்கு போட முடியாது. தமிழகத்தில் பாஜக வலிமையான கட்சி யாகியுள்ளது. கொங்கு மண்டலம் எப்போதும் அதிமுக, பாஜக கூட்டணிக்கானதுதான். திமுக வெற்றி பெற்றுள்ள பெரும்பாலான இடங்களில் பெற்றுள்ள வாக்குகளையும், அதிமுக, பாஜக பெற்ற வாக்குகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மைபுரியும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி பகுதிகளில் பாஜக அதிக அளவில் வெற்றி பெற்றுள்ளது. அதேபோல், கடலூர், வேலூர், திருப்பூர், மதுரை பகுதிகளிலும், சென்னையிலும் பாஜகவினர் புதிதாக வார்டு உறுப்பினர்களாக தேர்வாகி உள்ளனர்” என்றார். அதிமுகவின் சரிவுக்கு சசிகலா விவகாரம், ஒற்றைத் தலைமை கோரிக்கை, கோஷ்டி பூசல் காரணங்களாக கூறப்பட்டன. இதை சரி செய்ய தீவிர நடவடிக்கைகளை அதிமுக தலைமை மேற்கொள்ளவில்லை.

## உக்ரைனில் 5,000 தமிழக மாணவர்கள் தவிப்பு | பாதுகாப்பாக மீட்கக் கோரி மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழக மாணவர்களை சிறப்பு விமானம் மூலம் பாதுகாப்பாக மீட்க மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கக்கோரி, வெளியுறவு அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: உக்ரைன் நாட்டில் ரஷ்யா ராணுவம் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், அங்கு சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் அங்கு குடியேறியவர்களை சிறப்பு விமானம் மூலம் பாதுகாப்பாக மீட்க மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கக் கோரி, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

(24.2.2022) அதிகாலையில் ரஷ்ய ராணுவம் உக்ரைனுக்குள் புகுந்துள்ளது என்ற ஊடகச் செய்திகள் குறித்து வெளியுறவுத் துறை அமைச்சரின் உடனடி கவனத்தை ஈர்க்க விழைவதாகவும், தமிழகத்தைச் சேர்ந்த, தொழில்முறை படிப்புகள் பயிலும் சுமார் 5,000 மாணவர்கள் மற்றும் தமிழகத்தில் இருந்து குடியேறியவர்கள் உக்ரைனில் சிக்கித் தவித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ள முதல்வர், உக்ரைனில் படிக்கும் மாணவர்களின் குடும்பத்தினரிடமிருந்து நூற்றுக்கணக்கான துயர அழைப்புகளைத் தாம் பெற்றுவருவதால், அவர்களை அவசரமாக உக்ரைனிலிருந்து இந்தியாவிற்க அழைத்து வர மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். இருப்பினும், உக்ரைன் விமான நிலையங்கள் மூடப்பட்டி ருக்கும் என்று அறிவிப்பு வந்துள்ள நிலையில், உக்ரைனில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களைப் பாதுகாப்பாக இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கு மத்திய அரசின் உதவி தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, தமிழக அரசு 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையங்களைத் திறந்துள்ளது என்றும், மத்திய அரசு உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழர்களின் குடும்பங்களை மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைக்கவும், தமிழர்களை உக்ரைனிலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு ஏதுவாகவும், மாநில ஒருங்கிணைப்பு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.இந்திய அரசு அளவில் ஒருங்கிணைப்புப் பணிகளுக்கென்றே ஓர் இணைப்பு அலுவலரைத் தமிழ்நாட்டுக்கென்று அறிவிக்கலாம் என்று தாம் பரிந்துரைப்பதாகவும், முதல்வர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனில் சிக்கியுள்ள தமிழர்களை உடனடியாக இந்தியாவிற்கு அழைத்துவர அந்நாட்டு அரசின் உயர்மட்ட அளவில் இப்பிரச்சினையை எடுத்துச் செல்லுமாறு மத்திய அரசை தாம் கேட்டுக்கொள்வதாகவும், உக்ரைனின் பல்வேறு பகுதிகளிலிருந்து “வந்தே பாரத்” மிஷன் போன்ற சிறப்பு விமானங்களை இயக்க மத்திய அரசு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், இது தொடர்பாக அவசர நடவடிக்கை மேற்கொள்ளத் தாம் கோருவதாகவும் தமது கடிதத்தில் கேட்டுக் கெ ாண்டுள்ளார்.

## தமிழக முதல்வர் ஸ்டாலினின் ‘உங்களில் ஒருவன்’ நூல் வெளியீட்டு விழா; தேசிய கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பு : பாஜகவுக்கு எதிரான கட்சிகளை ஒருங்கிணைக்கும் திமுகவின் முயற்சி

முதல்வர் ஸ்டாலின் எழுதிய ‘உங்களில் ஒருவன்’ நூல் வெளியீட்டு விழாவில், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பல்வேறு தேசியகட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பது, பாஜகவுக்கு எதிரான மாநிலக் கட்சிகளை ஒருங்கிணைக்கும் திமுகவின் முயற்சி என்று கூறப் படுகிறது. நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024ம் ஆண்டு நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் 2 ஆண்டுகள் உள்ளன. இந்நிலையில், ஆளும் பாஜகவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்ட தேசிய மற்றும் மாநிலக் கட்சிகள் கூட்டு சேர்ந்து தேர்தலைசந்திக்க முடிவெடுத்து, அதற்கான முன்னெடுப்புகளை தொடங்கியுள்ளன.

இதுதவிர, இந்த ஆண்டு குடியரசுத்தலைவர் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியும் தொடங்கியுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தைகளும் கட்சிகளின் தலைவர்கள் மட்டத்தில் நடைபெற்று வருகிறது.சந்திரசேகர ராவ் சந்திப்பு இதற்கிடையே, தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை சமீபத்தில் சந்தித்துப் பேசினார். அதைத் தொடர்ந்து, மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரேயை சந்தித்து பேசியுள்ளார். அடுத்த கட்டமாக பல்வேறு மாநிலங்களின் கட்சித்தலைவர்களையும், தேசியக் கட்சிகளின் தலைவர்களையும் அவர் சந்திக்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, முதல்வர் மு.க.ஸ்டாலின், ‘அனைத்திந்திய சமூக நீதி கூட்டமைப்பு’ என்ற அமைப்பை தொடங்கியதுடன், சமூக நீதியில் பிடிப்புள்ள கட்சிகளின் தலைவர்கள் தங்கள் பிரதி நிதிகளை இந்த அமைப்புக்கு வழங்க வேண்டும் என்றும் பாஜக தவிர்த்து காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட தேசிய கட்சிகள், அதிமுகஉள்ளிட்ட மாநில கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். இதைத்தொடர்ந்து, காங்கிரஸ் பிரதிநிதியாக வீரப்ப மொய்லியை அக்கட்சியின் தலைவர் சோனியாகாந்தி அறிவித்தார்.

இந்த கூட்டமைப்பில் இணையவில்லை என அதிமுக அறிவித்து விட்டது. மதிமுக உள்ளிட்ட பிற கட்சிகள் இதற்கு விருப்பம் தெரிவித்துள் ளன.28ம் தேதி நூல் வெளியீட்டு விழாஇந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின், தான் எழுதியுள்ள தன் வரலாற்று நூலான, ‘உங்களில் ஒருவன்’ நூலின் முதல் பாகம்வெளியீட்டு விழாவில் பங்கேற்குமாறு காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் பிப்.28ம் தேதி மாலை 3.30 மணிக்கு இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது.

இவ்விழாவில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி நூலை வெளியிடுகிறார். கேரள முதல்வர் பினராயி விஜயன், ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் உமர்அப்துல்லா, பிஹார் மாநில எதிர்க்கட்சித்தலைவர் தேஜஸ்வி யாதவ் ஆகிய தேசிய தலைவர்கள் வாழ்த்துரை வழங்குகின்றனர். ஒருங்கிணைப்புக்கான முதல் படி காங்கிரஸ் இல்லாத பாஜக எதிர்ப்பு கூட்டணியை உருவாக்க சில கட்சிகள் முயற்சி செய்து வரும் நிலையில், அதை விரும்பாத திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், காங்கிரஸ் மற்றும் ஒரே கருத்துடைய கட்சிகளை இணைக்கும்முயற்சியின் அடுத்தகட்ட நடவடிக்கையை தொடங்கியுள்ளார். அதன் முதல்படிதான் இந்த நூல் வெளியீட்டு விழா என்று கூறப்படுகிறது.

# தமிழ்நாட்டில் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் நல்லாட்சி நடப்பது உலகத் தமிழர்களுக்குப் பெருமை!

உலகில் பலவிதமான ஆட்சிமுறைகள் இருக்கின்றன. அதில் மக்களாட்சி, பொதுவுடமை, சமவுடமை, பிரபுத்துவம், முடியாட்சி, பாசீசம், சர்வாதிகாரம் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை ஆகும். இந்த ஆட்சி முறைகளில் நல்ல அம்சங்களும் இருக்கும் கெட்ட அம்சங்களும் இருக்கும். பொதுவுடமை ஆட்சி என்பது ஒரு கட்சி ஆட்சி. வேறு கட்சிகள் கிடையாது. முடியாட்சியில் மன்னன் வைத்ததுதான் சட்டம். மேன்முறையீடு கிடையாது. பாசீச ஆட்சியில் ஒரு கட்சி ஆட்சிமட்டுமல்ல, தனிமனித ஆட்சியும் காணப்படும். சர்வாதிகார ஆட்சியும் அப்படித்தான். இதில் மக்களாட்சியில் மட்டுமே குடிமக்கள் தேர்தலில் வாக்களித்து கட்சிப் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எந்தக் கட்சிக்கு பெரும்பான்மை உண்டோ அந்தக் கட்சியின் தலைவர் பிரதமராக நியமிக்கப்படுவார். இந்த முறைமையில் இன்னொரு சிறப்பும் உண்டு. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத்தான் அந்தக் கட்சி ஆட்சியில் இருக்கும். அந்தக் கட்சி மறுபடியும் தேர்தலைச் சந்திக்க வேண்டியிருக்கும்.



மக்களாட்சி முறைமையில் பல குறைபாடுகள் உண்டு. அரச இயந்திரம் மெதுவாக நகரும். ஆட்சி மாறும்போது அரசின் போக்கும் மாறும். மூன்றாவது உலக நாடுகளில் அரசியல்வாதிகள் பொதுவாக வாக்குகளைப் பணத்துக்கு வாங்கிவிடுவார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மக்களாட்சி முறைமை ஒறுப்பானது. இந்திய நாட்டை எடுத்துக் கொண்டால் அங்கு எல்லாக் காலத்திலும் தேர்தல் நடந்து கொண்டே இருக்கும். நாடாளுமன்றத் தேர்தல் என்றால் 5 ஆண்டுக்கு ஒருமுறை. இந்தியாவில் உள்ள 28 மாநிலங்கள் மற்றும் 8 ஒன்றியப் பகுதிகள் இரண்டிலும் 5 ஆண்டுக்கு ஒரு முறை. இது போதாதென்று மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூட்சிகள் என தேர்தல் நடைபெறும். இவற்றுக்கெல்லாம் ஏராளமான பணம், நேரம், உழைப்பு செலவழிக்க வேண்டிவரும். இருந்தும் மக்களாட்சி முறைமைக்கு மக்கள் கொடுக்கும் விலை இது.

சீனா ஒரு பொதுவுடமை நாடு. அங்கு தேர்தல்கள் ஒற்றைக் கட்சி எதேச்சாதிகார அரசியல் அமைப்பின் கீழ் நடைபெறுகின்றன. இதனால் பணம், நேரம், உழைப்பு மிச்சம்.

தமிழ்நாட்டில் கடந்த வாரம் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் (மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ) ஆகியவற்றுக்கு கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி தேர்தல் நடந்து முடிந்து, வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகளும் வெளியாகியுள்ளன. இதில் ஆளும் திமுக கட்சி அமோக வெற்றி பெற்றிருக்கிறது. இது முற்றிலும் எதிர்பார்த்ததே. பொதுவாக நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் திமுக எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் கூட பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. அதே நேரம் இந்தத் தேர்தல் அதிமுக கட்சிக்குப் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.



அதிமுக கட்சியின் கோட்டை எனக் கருதப்பட்ட மேற்கு மண்டலத்தில் அந்தக் கட்சி முற்றாகக் கோட்டைவிட்டுள்ளது. மே 2016 இல் கோவை மாவட்டத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில் மொத்தமுள்ள 10 தொகுதிகளிலும் அதிமுக வெற்றிபெற்றது. ஆனால் இம்முறை அதிமுக இணைப்பாளர்களான ஓ. பழனிச்சாமி, ஓ பன்னீர்ச் செல்வம் இருவரது சொந்த மாவட்டங்களில் கூட அதிமுக தோல்வி கண்டுள்ளது.

கோவை மாவட்டம் அதிமுகவின் இரும்புக் கோட்டை என்பார்கள். அந்தத் தொகுதியில் செல்வாக்கோடு வலம் வந்தவர் முன்னாள் அமைச்சர் செ.ம. வேலுசாமி. ஆனால் அவரால்கூட அதிமுக தோல்வியை தடுக்க முடியவில்லை.

இடங்கள் - நகராட்சி 21, நகராட்சி 138, பேரூராட்சி 489

வட்டாரங்கள் - 12, 820, வேட்பாளர்கள் 57,746

ஆண்வாக்காளர்கள் - 1,37,06,793, பெண்வாக்காளர்கள் 1,42,45,637, மூன்றாம் பாலினம் 4,324

மொத்த வாக்காளர்கள் 2,79,56,754

வாக்குச்சாவடிகள் - 31,029,

அலுவலகர்கள் - 1,33,000 இலட்சம்.

தமிழகம் முழுவதும் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் 21 மாநகராட்சிகளையும் திமுக கூட்டணி கைப்பற்றியுள்ளது. கோவை மாநகராட்சி தேர்தலில் திமுக கூட்டணி 96 இடங்களில் வென்றுள்ளது. இதில் திமுக 73, காங்கிரஸ் 9, சிபிஐ 4, சிபிஐ(எம்) 4, மதிமுக 3, கொமதேக 2, மமக 1 இடங்களில் வென்றுள்ளன.

கோவை மாநகராட்சியில் உள்ள 100 வார்டுகளில் 96 இடங்களை திமுக கூட்டணி கைப்பற்றியுள்ளது. இதில் திமுக மட்டும் 73 இடங்களில் வென்றுள்ளது. அதிமுக வெறும் 3 வட்டாரங்களில் மட்டுமே பெற்று எதிர்கட்சி தலைமையைக் கூட பெறவில்லை. ஒன்பது இடங்களில் வென்ற காங்கிரஸ் எதிர்கட்சியாக அமர உள்ளது.

கோவை மாவட்டத்தில் உள்ள 7 நகராட்சிகளையும் திமுக கைப்பற்றியுள்ளது. நகராட்சிகளின் கீழ் உள்ள 198 வட்டங்களில் திமுக 159 வட்டாரங்களையும் அதிமுக 22 வாட்டாரங்களையும் வென்றுள்ளது. கீழ்க்கண்ட அட்டவணை , கட்சிகள் வெற்றிபெற்ற இடங்களை ஒரே பார்வையில் தருகிறது.

அட்டவணை

| கட்சியின் பெயர் | மாநகராட்சி வார்டு உறுப்பினர் | நகராட்சி வார்டு உறுப்பினர் | பேரூராட்சி வார்டு உறுப்பினர் |
|---|---|---|---|
| மொத்த பதவியிடங்கள் | 1373/1374 | 3842/3843 | 7604/7621 |
| போட்டி இன்றி தேர்வு | 4 | 18 | 196 |
| போட்டி தேர்வு | 1369 | 3824 | 7408 |
| வேட்பு மனு தாக்கல் இன்மை | 0 | 0 | 1 |
| தேர்தல் தள்ளி வைப்பு | 1 | 1 | 4 |
| தேர்தல் ரத்து | 0 | 0 | 12 |
| அ.இ.அ.தி.மு.க | 164 | 638 | 1206 |
| அ.இ.தி.கா | 0 | 0 | 0 |
| பி.எஸ்.பி | 0 | 3 | 1 |
| பி.ஜே.பி | 22 | 56 | 230 |
| சி.பி.ஐ | 13 | 19 | 26 |
| சி.பி.ஐ(எம்) | 24 | 41 | 101 |
| தே.மு.தி.க | 0 | 12 | 23 |
| தி.மு.க | 952 | 2360 | 4389 |
| இ.தே.கா | 73 | 151 | 368 |
| என்.சி.பி | 0 | 0 | 1 |
| தே.ம.க | 0 | 0 | 0 |
| மற்றவை | 125 | 562 | 1259 |
| மொத்தம் | 1374 | 3843 | 7621 |

மாவட்ட ரீதியான முடிவுகளை **https://tnsec.tn.nic.in/result/election_urban2022/index.php** என்ற தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தை சொடுக்கவும்.

சென்னை போன்ற மற்ற மாநகராட்சிகளில் திமுக வெற்றி பெறும் என்பது எதிர்பார்த்த ஒன்றுதான். உள்ளாட்சித் தேர்தல் எப்போதும் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக இருந்து வந்தாலும் அதிமுக ஆட்சியில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் கூட திமுக அதிக இடங்களில் வென்றிருந்தது. கோவையில் மட்டும் 100 தொகுதிகளில் திமுக தனித்து 76 இடங்களைப் பிடித்துள்ளது. கோவையில் திமுக தலைமை கோவையை ஒரு மானப் சிக்கலாகவே பார்த்தது. கோவை மாவட்டத்துக்கு கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் முன்னாள் அதிமுக அமைச்சர் ஆவார். இருபத்தொரு மாநகராட்சிகளையும் திமுக கூட்டணி கைப்பற்றியுள்ளது.

"திமுக கூட்டணிக்கு முழுவெற்றியைத் தந்த மக்களுக்குத் தொண்டாற்றக் காத்திருக்கிறோம். ஒன்பது மாத திமுக ஆட்சிக்கு மக்கள் அளித்த மாபெரும் நற்சான்றுதான் இந்த வெற்றி" என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

***- கனடா நக்கீரன்***

இதற்கு முன்னர் முதலமைச்சராக இருந்தவர்களை விட ஸ்டாலின் சுறு சுறுப்பாக அரச இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். கோவிட், மழைவெள்ளம் என பேரிடர்கள் வந்த போது களத்தில் இறங்கி மக்களோடு மக்களாக இருந்து அவர் பணியாற்றினார். மக்கள் குறைகளைக் கேட்டு அவற்றை தீர்த்து வைக்கிறார். ஸ்டாலின் அவர்களது உழைப்பைப் பார்த்து உயர் அதிகாரிகளும் காலநேரம் பாராது கடுமையாக உழைக்கிறார்கள். தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு, முதலமைச்சரின் தனிச் செயலாளர்களாக உதயசந்திரன், உமாநாத், எம்.எஸ். சண்முகம் மற்றும் யோர்ஜ் போன்ற தமிழ் உணவாளர்கள், இனப்பற்றாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஓர் அரசன் எப்படி நாட்டை ஆளவேண்டும் என்பதை திருவள்ளுவர் இறைமாட்சி என்ற அதிகாரத்தில் சொல்லியிருக்கிறார்.



முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். (குறள் 388)

இதன் பொருள் நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், இறைவன் என்று தனியே கருதி மதிக்கப்படுவான். இந்தக் குறளுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

அதிமுக இந்தத் தேர்தலை தனித்துச் சந்தித்தது. பாமக ஏற்கனவே வெளியேறிவிட்டது. இம்முறை பாஜக கூட்டணியில் இருந்து வெளியேறியது அதிமுகவுக்குப் பலமேயொழிய பலவீனம் அல்ல என்று அதிமுக சொல்லியது. காரணம் சிறுபான்மை தலித் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகள் அதிமுக க்கு விழும் என்ற எதிர்பார்ப்பு ஆகும். ஆனால் அது நடக்கவில்லை. அதிமுகவின் தோல்விக்கு அதன் ஆளுமையற்ற தலைவர்களே முழுக்க முழுக்க காரணமாகும். எம்ஜிஆர், ஜெயலலிதா போன்ற ஆளுமைமிக்க, கவர்ச்சிகரமான தலைவர்களோடு பழனிச்சாமியையும் பன்னீர்ச்செல்வத்தையும் ஒப்பிட முடியாது. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை உள்ளது. இன்னொரு காரணம் அதிமுக இரண்டு மூன்றாகப் பிரிந்து கிடப்பது. சசிகலாவால் முதலமைச்சராக நியமிக்கப்பட்ட பழனிச்சாமி அவருக்குத் துரோகம் செய்து விட்டார் என அதிமுக இன் அடிமட்டத் தொண்டர்கள் நினைக்கிறார்கள். டி.டி. தினகரனின் அமமுக பல இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

இந்தத் தேர்தலில் தனியே போட்டியிட்ட பாஜக மொத்தம் 22 மாநகராட்சி, 56 நகராட்சி, 230 பேரூராட்சி இடங்களை அந்தக் கட்சி கைப்பற்றியுள்ளது. ஆனால் இந்தத் தேர்தலில் மொத்த வாக்குகள் 2.852 கோடி. செலுத்தப்பட்ட வாக்குகள் 1.69 கோடி. இதில் பாஜக க்கு கிடைந்த வாக்குகள் 9 இலட்சம் (5.33 %) ஆகும்.

இந்தத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி, மக்கள் நீதிமன்றக் கட்சி படு தோல்வியை தழுவியுள்ளன. இந்த ஆண்டு மே மாதத்தில் நடந்த சட்ட சபைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி 6.72 % வாக்குகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் பகுத்தறிவு, சுயமரியாதை, சமூகநீதி, சமத்துவம் ஆகிய கோட்பாடுகளைப் போற்றும் வினைத்திறன்மிக்க நல்லாட்சி நடப்பது உலகத்தமிழர்களுக்கு பெருமை ஆகும்.



**மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்**




# 'மஹாகவி' பாரதி பாடல்கள்

***அத்தியாயம் - 11***

பாரதி நூற்றாண்டு நினைவாக பாரெங்கும் பாரதியின் மந்திரச்சொல் நிறைந்த கவிதைகளையும், எழுத்துக்களையும், வாசகங்களையும், பாரதியினிடத்துப் பக்தியும் காதலும் கொண்ட அறிஞர்கள் பரசவத்தோடு பேசியும், எழுதியும், கொண்டாடியும் வருவதை பல்வேறு ஊடகங்கள் வாயிலாக அறிந்து இன்புற்று வரும் இக்காலத்தில் அவரது எழுத்தியல் தடயங்கள் என்னிடம் சோர்வை அகற்றுகின்றன, சுறுசுறுப்பை வளர்க்கிறன, ஆண்மையை வலிமைப்படுத்துகிறது.

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும், நான் தமிழின் சொந்தக்காரன், இரத்த உரித்துக்காரன் என்ற தைரியத்தைச் சோரவிடாமல் காக்கிறது. அவ்வகையில் கனடாவில் வாழும் ஈழத்துக் கவி அன்பர் "பெருங்கவிஞன் பாரதி" எனும் தலைப்பின் கீழ் எழுதிய கவிதையிலிருந்து சில வரிகளை வாசகர்களோடு இணைந்து மீண்டும் இரசிக்க விரும்புகிறேன்! ("பூமழை" கவிதைத்தொகுப்பு).

"...வில்லேந்தும் சொற்கவிதை வண்ணத்தாலே
விடுதலையூர் சேர்ந்திடற்காய் நீயோ வந்தாய்
முல்லை மணச் சுவையிலே ஐயா மூத்தோர்
முத்தமிழர் குறைதீர்க்கக் கவிதை சொன்னாய்,"
என்றும்,
"சாலையிலே வாடிட்ட முல்லைக் கன்று
சரித்திரத்துப் பாரிதரும் தேரைப் போல
ஆலையிடக் கரும்பாக வாழ்ந்தோர்க் கைய
அருங்கவிதை நீசொரிந்தே உணர்ச்சி ஈந்தாய்"

எனவும்,
"வயல் வெடித்த நிலை கண்டு வானம் பார்க்கும்
உழவர்க்கு மாமழைபோல் எம்முன் வந்தாய்!
புயல்வீசி அழிந்திட்ட பூங்காவிற்குள்
புதுமலர்கள் சிரித்தாற்போல் தனித்தே நின்றாய்"

எனவும்,
கலைஞ நின் கவிதைகளால் தரிசாய்ப் போன
தமிழ்மண்ணும் சிலிர்த்ததடா! காற்றுக் கூட
அலையெறிந்து புயலாகிப் போருக்காக...
ஆர்ப்பரித்து வீசிற்று..."

எனும் வரிகள், பாரதியிடம் பக்தியும், பாசமும் கொண்டு எழுதிய பாரதிதாசனாரின் வீறுகொண்ட எழுத்துக்களுக் கூடாக கனடிய ஈழக் கவிஞரகளும் என்னைப் பேருவகை கொள்ள வைக்கின்றனர்.

இனி இவ்வாரம் தமிழ் சினிமாவில் "மகாகவி" பாரதி பாடல்களில் ஒன்றாக இடம் பெறும் பாடல் கலைஞர். மு. கருணாநிதி ஐயா அவர்களின் கதை வசனத்தோடு வெளியான (1987) "நீதிக்குத் தண்டனை" படத்தில் இடம் பெற்ற பாடலாகும்.

கலைஞர் மு. கருணாநிதி ஐயாவின் கைவண்ணத்தில் சுமார் 69 படங்கள் வரை திரைக்கதை அமைத்து, உரையாடல்களும், பல படங்களுக்குப் பாடல்களும் எழுதியுள்ளார்.

பெண்ணுரிமை, பெண் விடுதலை, மூட நம்பிக்கைகளைச் சாடுதல், பகுத்தறிவு, சமூகநீதி, தேச விடுதலை, தீண்டாமை என பாரதியின் கொள்கைகள், கருத்துக்களை முன்னிறுத்தி திரைச்சித்திரங்கள் வாயிலாகப் பாடம் சொல்லியிருந்தாலும், ஒரே ஒரு படமான "நீதிக்குத் தண்டனை" படத்தில் மட்டுமே பாரதி யையாவின் பாடலொன்று இடம் பெற்றுள்ளது.

பாரதி ஐயாவை விட அவரது தாசனாகத் தன்னை வரித்துக் கொண்ட "பாவேந்தர்" பாரதிதாசன் கவிதை வரிகளை மேற்கோள்காட்டியும், மேடைகளில் பேசியும் வந்தவர் கலைஞர் மு.க. என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

காளி உபாசகரும், தேவி பராசக்தியின் பக்தருமாகிய "மகாகவி" பாரதி ஐயா அன்னை பராசக்தியை குழந்தையாகக் கண்டு, பாடியும், எழுதியதுமான "கண்ணம்மா என் குழந்தை" எனும் தலைப்பின் கீழ் "சின்னஞ்சிறு கிளியே - கண்ணம்மா" எனும் 40 வரிகள் கொண்ட பாடலில் 12 வரிகளை மட்டும் தாலாட்டுப் பாடலாக்கி கே.ஜே. யேசுதாஸ் - செல்வி. சுவர்ணலதா இருவரையும் பாட வைத்து இசையமைத்திருப்பார் "மெல்லிசை மன்னர்" எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்கள். படத்தில் நாயகன் "நிழல்கள்" ரவியும் - திருமதி. ராதிகாவும் குழந்தையைத் தாலாட்டும் பாடலாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் இனிமையான பாடலாகும். இதோ திரைபடத்தில் இடம்பெற்ற பாரதி வரிகள்.



"சின்னஞ்சிறு கிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே - உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!
(சின்னஞ்சிறு)

பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா
பேசும் பொற் சித்திரமே!
அள்ளி அணைத்திடவே - என் முன்னே
ஆடி வருந்தேனே...!
(சின்னஞ்சிறு)

கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ!
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா
உன்மத்தமாகுதடி...!
(சின்னஞ்சிறு)

பாரதி ஐயா எழுதிய பாடல்களில் சிலவற்றைத் திரைப்படங்களில் காட்சிக்கேற்றார் போல் காட்சிப்படுத்திப் பாட வைத்தது மல்லாமல். முக்கிய பாத்தரங்களின் குரலில் பேச வைத்த பாடல் வரிகளும் சில படங்களில் இடம் பெற்றுள்ளன! உதாரணமாக...

நடிப்புச் சுதேசிகளைப் பார்த்துப் பேசுவதாக திரையுலகின் தலைமகன் ஒருவர்
"நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ - கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி..."
எனத் தனது ரௌத்திரத்தை வெளிக்காட்டுவார்!
இக்காட்சி எப்படத்தில் இடம் பெற்றிருந்தது?
காட்சி அடுத்த இதழில்...

**- வீணை மைந்தன்**




**கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை**

**NEW LIFE FRESH START**

**வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு**

**Reduce your debts upto 80%**


கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

**55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4**

**Tel: 647-274-2832**
**Fax: 416-332-0914**
www.creditrecoverycanada.com


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# Basil Back in New Delhi as Lanka Faces Serious Economic Crisis

- Siva Parameswaran, Senior International Journalist London



Sri Lanka's finance minister Basil Rajapaksa is on 'Mission Delhi' again in less than two months as the country reels under intense economic crisis amidst escalating fuel and food cost.

As the country's human rights record is being closely watched by the international community, lending institutions are taking a cautious approach and await the outcome of the United Nations annual general session from 28 February to 1st April which includes a discussion on Sri Lanka.

UNHRC commissioner Michelle Bachelet is expected to make a written submission to the council on the status of the human rights situation in Sri Lanka. During the visit by Basil Rajapaksa to New Delhi, both the nations are expected to finalise at least three defence agreements. While indications are that he will be seeking additional bailout package from India to tide over the grave economic crisis, the defence deals are also likely to be signed during the visit.

The defence agreements are believed to focus on boosting cooperation in maritime security. With huge quantities of narcotics continue to be seized off the Indo-Sri Lanka waters, concerns have been raised that Sri Lanka is becoming if not already the new global hub of international drugs trade.

Security analysts say, the Afghanistan-Pakistan corridor coming under extended watch of the international radar, the Arabic Sea coast and Sri Lanka has become the focal point of the drug smugglers. They also say that a strong maritime security is need in the international waters.

Basil Rajapaksa the junior among the Rajapaksa brothers, has been continuously lobbying with New Delhi seeking close to a billion dollars in assistance partly as aid and partly as long term loan.

This line of credit by India is provided mainly for purchase of essential items including food and medicines.



Apart from the economic bailout package, the defence related agreements would boost the capabilities of the Sri Lankan armed forces and increased maritime security. South Asian security analysts say the Sri Lankan Navy lack the capabilities to tackle curb the narcotics trade in the high seas around the island nation. At the same time concerns have been raised in the south Indian state of Tamil Nadu that empowering the SL Navy will cause more harm to their fishermen who regularly cross the Palk straits and are accused of using banned fishing methods.

Though India continuously raises its concern over the issue of fishermen across the narrow strip of sea between the two nations, Sri Lanka has not honoured its commitment given to India of not arresting the Indian fishermen and seizing their boats.

The visit of Basil Rajapaksa is also likely to result in the signing of an agreement for Sri Lanka to purchase two Dornier aircraft and the acquisition of a 4,000-tonne naval floating dock. Also, Sri Lanka has agreed to post a naval liaison officer at the Indian Navy's Information Fusion Centre-Indian Ocean Region based in Gurugram near Delhi.



While the Indian government tracks commercial shipping lines in and off its territorial waters, it comes under pressure of tackling maritime terrorism and piracy and actively seeks the cooperation of its neighbours in particular Sri Lanka. The Sri Lankan liaison officer if-and-when posted will join other ten partner nations which include the US, UK, Japan, Australia, Maldives, and Singapore. The naval floating dock is a facility equipped with automated systems for top tech repairs of warships. It will also have the muscle to lift large ships like frigates and destroyers.

In the recent months, India has extended its financial support to Sri Lanka as part of its neighbour first policy and the four-pillar package which was agreed in principle during the visit of Basil Rajapaksa in December last year. India has provided a $500 mn line of credit for purchase of fuel and other essentials and a currency swap pf $400 million under the SAARC facility. Moreover, India has deferred the repayment of over 500 million dollars due to the Asian Clearing Union.

Political parties in Tamil Nadu are up in arms against any continued assistance to Sri Lanka, who accuse their armed forces of war crimes and committing genocide.

Basil Rajapaksa being a master negotiator, is expected to back with his substantial fund and defence pact with India.







# இவ்வார ராசிபலன்

## 25-02-2022 வெள்ளி தொடக்கம் 03-03-2022 வியாழன் வரையும்




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். வம்பு தும்புகள் ஒழியும். பூர்வீக சொத்து சேரும். உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். கனவு தொல்லை உண்டு. தேவைகள் பூர்த்தியாகும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்வர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத்தேடி வரும். இனிய தகவல் வந்து சேரும். புதியத்தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உடல் மனநிம்மதி தரும். பாராட்டுப் பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. செல்வாக்கு உயரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். புதிய முதலீடு தவிர்க்கவும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். புதிய நட்பை தவிர்க்கவும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மாணவர்கள் உற்சாகம் கூடும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். அந்நிய தேசப்பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,7,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,L




**ரிஷபம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். செய்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மனஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். சுபகாரியம் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். புத்தி சாதுர்யம் பெருகும். தந்தை உடல்நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளால் தாமதம் ஏற்படும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். இல்லத்தில் அமைதி கூடும். நீண்ட நாள் நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். சுபகாரியம் கைகூடும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பொது வாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,5,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**மிதுனம்:** மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. காதலர்கள் தம்பதியாவார்கள். கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். இடமாற்றம் நன்மை தரும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் தரும். தன வரவில் தடங்கல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல்நலம் பாதிக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். பிரயாணம் ஏற்படும். உணவ விடுதி லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். உலோகத் தொழில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சுப்ரமணியர், அதிர்ஷ்ட எண்: 8,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**கடகம்:** பிள்ளைகளால் சொத்து சேரக்கூடிய வாரம். தாராளமான தனவரவு உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புகள் அடங்கும். சிறப்புக்கள் சேரும். பொறுப்புக்கள் கூடும். குடும்ப அன்யோன்யம் கூடும். வாய்ப்புகள் தேடி வரும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். கையிருப்பு கரையும். உடல்நலம் சீராகும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மாணவர் திறமை பளிச்சிடும். சிறிய இடையூறு ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சுயபலம் கூடும். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். தங்க நகைகள் சேரும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். புகழ்ச்சி அதிகரிக்கும். வெளியூர் பயணம் ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். ஆரோக்கியம் சீராகும். குடும்ப மேன்மை தரும். எந்திர தொழிலில் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வாகன அபிவிருத்தி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,2,7,9
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,K




**சிம்மம்:** நம்பிக்கைக்குரியவர்களை சந்திக்கும் வாரம். வழக்குகள் வெற்றி தரும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். கமி'ன் தொழில் கவனம் தேவை. ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். விடாமுயற்சி அவசியம். போட்டிகள் மறையும். நல்லோர்களின் நட்பு கிட்டும். நிதி நிலைமை சீராகும். வழிபாடு மாற்றம் தரும். முயற்சிகள் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கைகூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சியில் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. அணிகலன் சேரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். திடீர் பயணம் ஏற்படும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,F




**கன்னி:** இக்கட்டான சூழ்நிலைகள் அகலும் வாரம். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். அணிகலன் சேரும். ஆலோசனை பலன் தரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். புதிய எண்ணம் நிறைவேறும். நண்பர்களால் நன்மையுண்டு. வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். கல்வியில் கவனம் தேவை. காதல் கசக்கும். வழக்குகள் சாதகமாகும். தொழில் மேன்மை உண்டு. விவசாயம் பலன் அளிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத்தடை ஏற்படும். சோம்பல் அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாதிப்புகள் அகலும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். உடல்நலம் கவனம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 3,7,5,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H




**துலாம்:** பெருமைகள் சேரும் வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய கடன் வசூலாகும். பயணம் அனுகூலம் தரும். வாகனச்செலவு ஏற்படும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கடன் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் கவனம் தேவை. கலைத்துறையில் திருப்பம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். போட்டிகள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். தகுதிகள் உயரும். புதிய எண்ணங்கள் உருவாகும். கவலைகள் ஒழியும். கடன் பிரச்சனைகள் அகலும். சுபச்செலவு அதிகரிக்கும். அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். பொறுப்புக்களால் சிறப்பு சேர்க்கும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். மறைமுக எதிர்ப்பு விலகும். பணிவான பேச்சுகள் தேவை. சச்சரவுகள் அகலும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 5,3,7,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். நன்மைகள் பெருகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பொருளாதாரம் உயரும். சிந்தனைகள் மேலோங்கும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. உதவும் குணம் அதிகரிக்கும். வணிகத்தொழில் வளம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. தொலைபேசி தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பழைய பாக்கி வசூலாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பாராட்டுக்கள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். ஆடை, அணிகலன் சேரும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பெருமைகள் சேரும். திட்டமிட்ட செயல் தேவை. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். பணப்பற்றாக்குறை நீங்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. எள் தானம் ஏற்றம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**தனுசு:** வறுமைகள் விலகும் வாரம். விவசாயிகள் பயன்பெறும். தெளிவான முடிவுகள் உதயமாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நண்பர்கள் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் தவிடுப்பொடியாகும். கௌரவத்தில் கவனம் தேவை. புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். கலக்கமான மனநிலை காணப்படும். பிரார்த்தனையால் பலன் உண்டு. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். அதிகாரம் உயரும். அணிமணிகள் சேரும். வாகன யோகம் உண்டு. கட்டிட தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். தேச பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். பொருளாதாரம் மேம்படும். திருமண தீபம் சுடர்விடும். கடன் பாக்கிகள் வசூலாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. உழைப்பில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனநெருக்கடிகள் தீரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். பணியில் பாராட்டு கிட்டும். உடல்நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K





**மகரம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும். பெண்களால் பெருமை உண்டு. எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். திடீர் பயணம் ஏற்படும். மதிப்பு உயரும். மனைவி பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு கூடும். பூமியால் லாபம் உண்டு. குடும்பத்தில் குழப்பம் நீங்கும். சுபச்செலவு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்ள் நிறைவேறும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. உதவிகள் கிட்டும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வசதிகள் பெருகும். புதுமுயற்சிகள் பலன் அளிக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். சொத்துக்கள் சேரும். உத்யோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். கவனமுடன் செயல்பட வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,7,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y




**கும்பம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். யோகமான காலம். எதிர்பார்ப்பினால் பலன் உண்டாகும். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். தாய்வழி உறவு நன்மை தரும். பயணம் தடைப்படும். இடமாற்றம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. வெற்றி சீக்கிரம் கிட்டும். சட்டம் சாதகமா-கும். சந்தோஷமான சூழ்நிலை அமையும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். பூமியால் லாபம் அடைவீர்கள். புதிய பொருள் சேரும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். பாராட்டுக்கள் கிடைக்கும். மற்றவர் தொல்லைக் குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். கலைத்தொழிலில் திருப்பம் தரும். சமூக சேவை செய்ய முன் வருவீர்கள். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள். முகப்பொலிவு உண்டாகும். உணவு பிரியம் அதிகரிக்கும். வாய்ச்சொல் பலன் உண்டு. தொழில் வளம் கூடும். காதலில் புரிந்துணர்வு இருக்கும். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். உலோகத் தொழில் உயர்வு தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 8,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,R




**மீனம்:** காரியத்தில் வெற்றி காணும் வாரம். ஆதாயம் பெருகும். நிர்வாகத் திறமை கூடும். வீடு, மனை யோகம் உண்டு. அரசாங்க அனுகூலம் உண்டு. இனிய எண்ணம் உதயமாகும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் திறமை பளிச்சிடும். நினைத்தக் காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கலை ஆர்வம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். வீண் செலவு அதிகமாகும். தடைகள் விலகும். தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும். பொன், பொருள் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிதான காரியம் நடைபெறும். குடும்ப மகிழ்ச்சி இருமடங்காகும். சகோதரியால் லாபம் உண்டு. ஒப்பற்ற பலன் சேர்க்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். குடும்ப சச்சரவு ஏற்படும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,6,9
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J

சினிமா

# காணாமல் போனதாக தேடப்பட்டு வந்த அமெரிக்க டிவி நடிகை மர்ம மரணம்



பிரபல அமெரிக்க டிவி நடிகை லிண்ட்ஸே பியர்ல்மேன் மர்மமான முறையில் இறந்து கிடந்துள்ளது ஹாலிவுட் ரசிகர்கள் மற்றும் திரையுலகினரை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. வெறும் 43 வயதே ஆன லிண்ட்ஸே பியர்ல்மேன் ஏகப்பட்ட பிரபலமான டிவி தொடர்களில் முன்னணி கதாபாத்திரத்தில் நடித்து வந்தவர். சில நாட்களுக்கு முன்னதாக அவர் காணாமல் போய் விட்டார் என வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில், தற்போது அவரின் சடலம் கிடைத்திருப்பது பரபரப்பை கிளப்பி உள்ளது.

ஜெனரல் ஹாஸ்பிடல், அமெரிக்கன் ஹவுஸ்வை.்.ப் உள்ளிட்ட பிரபலமான டிவி தொடர்களில் நடித்து வந்தவர் நடிகை லிண்ட்ஸே எரின் பியர்ல்மேன். மாடல் அழகியான அவர், விலங்குகள் மற்றும் பறவைகளின் ஆர்வலராகவும், சமூக ஆர்வலராகவும் செயல்பட்டு வந்தார். இந்நிலையில், நடிகையின் திடீர் மரணம் ஏகப்பட்ட சந்தேகங்களை கிளப்பி உள்ளது. கடந்த பிப்ரவரி 12ம் தேதி பிரபல அமெரிக்க டிவி நடிகை லிண்ட்ஸே பியர்ல்மேன் காணாமல் போனதாக அவரது கணவர் வான்ஸ் ஸ்மித் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். தனது மனைவியை காணவில்லை என கணவர் அளித்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து லாஸ் ஏஞ்சல்ஸ் நகர போலீசார் விசாரித்து வந்தனர். காணவில்லை என புகார் அளிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த நிலையில், பிப்ரவரி 19ம் தேதி அடையாளம் தெரியாத பெண் ஒருவர் மர்மமான முறையில் இறந்து கிடப்பதாக போலீசாருக்கு வந்த தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த போலீசாருக்கு, அந்த சடலம் நடிகையின் சடலம் என்று உறுதியான நிலையில், மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இது கொலையா? அல்லது தற்கொலையா? நடிகை எப்படி இறந்தார். ஏதாவது முன்விரோதம் இருந்ததா? என பல கோணங்களில் போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர். பிரபல டிவி நடிகையின் மறைவுக்கு ரசிகர்களும், பிரபலங்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர். கிழக்கு ஹாலிவுட் பகுதியில் மர்மமான முறையில் நடிகை இறந்து கிடந்த நிலையில், அந்த பகுதி மக்களின் உதவியை போலீசார் நாடியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. கடைசியாக கடந்த பிப்ரவரி 15ம் தேதி நடிகையை சிலர் பார்த்ததாகவும் தகவல்கள் கிடைத்துள்ள நிலையில், தீவிரமாக விசாரணையை போலீசார் நடத்தி வருகின்றனர்.

# 13 வருட அண்ணன் தம்பி பகை தீர்ந்தது! இளையராஜா கங்கை அமரன் ஒன்றாக இணைந்தார்கள்



சினிமாவில் போட்டி, பொறாமை என்பது சகஜம் தான். அந்த வகையில் தமிழ் சினிமாவில் பல வெற்றி படங்களை கொடுத்த அண்ணன், தம்பியின் பிரிவு ரசிகர்களை கவலையில் ஆழ்த்தியது. இவர்கள் பிரிவுக்கு பல விமர்சனங்கள் வந்தாலும் இருவரும் அதைப் பற்றி பேசவே இல்லை. பாவலர் சகோதரர்கள் என்று அழைக்கப்படும் இளையராஜா, கங்கை அமரன் இருவரும் 13 வருடங்களுக்குப் பிறகு ஒன்றாக இணைந்துள்ளனர். அந்தக் காலகட்டத்தில் கங்கை அமரன் இயக்கம் அனைத்து படத்திலும் இளையராஜா தான் இசையமைப்பார். இவர்கள் காம்போவில் வெளியாகும் படங்கள் அனைத்துமே வெற்றிதான். இதற்கு எடுத்துக்காட்டாக கரகாட்டக்காரன் படத்தையே சொல்லலாம். இவ்வாறு சென்று கொண்டிருக்கும் போது இவர்களிடையே அவ்வப்போது சின்னச் சின்ன சண்டைகள் வரத்தொடங்கியது. அந்த சண்டை பெரிய விரிசல் ஆக காரணமாக இருந்த படம் சின்ன ராமசாமி பெரிய ராமசாமி. இப்படத்தின் தயாரிப்பின் போது இருவர் இடையே மனக்கசப்பு ஏற்பட்டு பிரிந்து விட்டனர். அதன் பிறகு இவர்கள் இருவரும் சந்திக்காமலும், பேசிக் கொள்ளாமலும் இருந்துள்ளனர். கங்கை அமரன் மனைவி இறப்புக்கு கூட வரவில்லை இளையராஜா என்ன காரணம் என்று கேட்டதற்கு அப்படி இப்படி என்று மழுப்பி விட்டாராம்.

தற்போது கங்கை அமரன் அண்ணன் இளையராஜா தான் என்னை வழிநடத்த வேண்டும் என்பது போன்ற கருத்துக்களை தெரிவித்துள்ளார். இளையராஜா, கங்கை அமரன் இடையே மனஸ்தாபங்கள் இருந்தாலும் இவர்களது வாரிசுகள் எந்த மோதல்களும் இல்லாமல் பாசமாக இருந்து வந்தனர். அதேபோல் வெங்கட்பிரபு இயக்கும் படங்களில் இளையராஜாவின் மகன் யுவன் சங்கர் ராஜாதான் இசையமைப்பார். இந்நிலையில் இளையராஜா மற்றும் கங்கை அமரன் இருவரும் 13 வருடங்களுக்குப் பிறகு இணைந்துள்ளனர். இவர்கள் இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்படத்தை கங்கை அமரனின் மகன் இயக்குனர் வெங்கட்பிரபு தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படத்தை பார்த்த இவர்களது ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# "காத்து வாக்குல ரெண்டு காதல்" வெளியீட்டு உரிமையைவாங்கிய உதயநிதி



நயன்தாராவும், அவரது காதலர் விக்னேஷ் சிவனும் இணைந்து நடத்தும் ரவுடி பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படம் காத்து வாக்குல ரெண்டு காதல். விஜய் சேதுபதி, நயன்தாரா, சமந்தா, கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த், நடன இயக்குர் கலா உள்பட பலர் நடித்துள்ளனர். அனிருத் இசையமைத்துள்ள இப்படத்தை விக்னேஷ் சிவன் இயக்கி உள்ளார்.

இப்படத்தின் தமிழக வெளியீட்டு உரிமையை உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயண்ட் மூவீஸ் நிறுவனம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படம் வருகிற ஏப்ரல் 28ம் தேதி திரையரங்குகளில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

# "வலிமை" படம் ஓடும் திரையரங்கில் பெட்ரோல் குண்டு – கோவையில் பரபரப்பு



நடிகர் அஜித் நடிப்பில், இயக்குனர் வினோத் இயக்கத்தில், போனி கபூர் தயாரிப்பில் உருவாகியுள்ள வலிமை திரைப்படம் பிப்ரவரி 24 திரையரங்குகளில் வெளியானது. இதனையொட்டி, நள்ளிரவு முதலே திரையரங்குகள் முன்பு ரசிகர்கள் பட்டாசு வெடித்தும், நடனமாடியும் கொண்டாடி வந்தனர். காலை 5 மணிக்கு முதல் காட்சி என்பதால், வலிமை திரைப்படம் ஓடும் திரையரங்களில் ரசிகர்கள் கூட்டம் அதிகளவில் இருந்ததால், காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில அதிகாலை 5 மணியளவில், கோவை காந்திபுரம் 100 அடி சாலையில் உள்ள கங்கா திரையரங்கின் முன்பு ரசிகர்கள் திரண்டு இருந்த போது, அங்கு இரு சக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள், திடீரென பெட்ரோல் குண்டை ஒன்றை வீசிவிட்டு தப்பிச் சென்றனர். வாகன நிறுத்தும் இடம் அருகில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டதால், யாருக்கும் காயம் ஏற்படவில்லை. சேதமடைந்த வாகனத்தை ரசிகர்கள் உடனே அப்பறப்படுத்தியதால், பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது. இருசக்கர மோட்டாரில் வந்த மர்ம நபர்கள் குறித்து, சிசிடிவி காட்சிகள் மூலம் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் காரணமாக அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.


**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Children's Party
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Holiday Party
- Religious Ceremonies
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

# ஈழத்துத் திருக்கோவில்கள் 987



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## புலோலி பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானம் (பருத்தித்துறை சிவன் கோயில்)

*"சித்தமற்றுச் சிந்தையற்றுச் சீவனற்று நின்றிடம்*
*சத்தியற்றுச் சம்புவற்றுச் சாதிபேத மற்றுநல்*
*மூத்தியற்று மூலமற்று மூல மந்திரங்களும்*
*வித்தைஇத்தை ஈன்றவிதத்தில் விளைந்ததே சிவாயமே"*

இவ்வாலயம் அமைந்துள்ள இடத்தின் பண்டைக்காலப் பெயரான வென்றிவாகு தேவன் குடியிருப்பு என்பது, வரலாற்றுப் பெயர்களோடு ஒத்துக் காணப்பட்டாலும் அதற்குரிய பெயர்க்காரணம் கூறப்படவில்லை. கட்டுப்பாடுகளற்ற அக்காலப்பகுதியில் தென்னாட்டிலிருந்து வர்த்தக நிமித்தமாகவும், யாத்திரை காரணமாகவும் ஈழத்தைநோக்கி மக்கள் வருகை தந்துள்ளனர். இவ்வாறு குடியேறியவர்களுள் செட்டிமார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், ஈழத்திலே சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றியபணி குறிப்பிடத்தக்கது. இப்பெருமக்களால் கட்டப்பட்டு நிருவகிக்கப்படும் பல கோயில்கள், இன்றும் ஈழமெங்கும் காணப்படுகின்றன. இத்தகைய கோயில்களுள் பருத்தித்துறை சிவன் கோயில் என வழக்கிலுள்ள பாவதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் நிர்வாகம் புலோயில் வாழ்கின்ற செட்டிமார் பரம்பரையினராலேயே நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்புவரை, தென்னாட்டிலிருந்து வர்த்தகர்களும், யாத்திரீகர்களும் எவ்வித கட்டுப்பாடுமற்ற முறையிலே ஈழத்திற்கு வந்து சென்றுள்ளனர். அவ்வாறு வருகின்ற யாத்திரிகர்களும், சந்நியாசிகளும் தாம் தங்குமிடங்களில், தம்முடன் கொண்டுவரும் திருவுருவங்களை வைத்து வழிபாடியற்றி வந்துள்ளனர். பின்னர் அவற்றை தமது எண்ணத்தில் தோன்றியவர்களிடம் கொடுத்து, குறிப்பிட்ட இடத்திலே ஆலயம் அமைக்கும்படி கூறிவிட்டுச் செல்வது வழக்கமாக இருந்துள்ளது. இவ்வாறாக ஞானியரின் திருவாக்குக்கமைய அமைக்கப்பட்ட பல கோயில்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள புலோலி என்ற இடத்திற்கு, ஒரு சுவாமிகள் இந்தியாவிலிருந்து வருகைதந்து, இக்கோயில் அமைந்துள்ள இடத்திலே நின்ற கொன்றை மரத்தின் கீழ் தங்கியிருந்தார். அவர் வரும்பொழுத தன்னுடன் கருங்கல்லிலாலான பிள்ளையார், தாமிரத்தினாலான வீரபத்திரர் போன்ற திருவுருவங்களைக் கொண்டு வந்துள்ளார். தான் தங்கியிருந்த கொன்றைமரத்தின்கீழ் பிள்ளையார், வீரபத்திரர் திருவுருவங்களை வைத்து பூசையாற்றி வழிபாடு செய்துவந்தார்.

இச்சுவாமிகள் அருட்சக்தி நிறைந்தவராக விளங்கியுள்ளார். கொன்றைமரத்தின்கீழ் தங்கிருந்த சுவாமிகள் வைத்தியம் தெரிந்தவராகவும் விளங்கியுள்ளார். அவ்வூர் மக்ளோடு பழகியதோடு, அம்மக்களுக்கு ஏற்படும் நோய்கள் நீங்க வைத்தியம் செய்தார். இவர் மந்திரங்கள், சித்துக்கள் தெரிந்தவராதலால் பல அற்புதங்களை நிகழ்த்தினார். இக்காரணங்களினால் இவரது புகழ் ஊரெங்கும் பரவியது. தமது நோய்பிணி நீங்கவும், தொல்லைகள் தீரவும் உதவிவேண்டி இவ்வூர் மக்கள் சுவாமிகளை நாடி வரத் தொடங்கினர்.

இவ்வாறு தன்னை நாடி வரும் மக்களுக்கு, தான் தங்கியிருந்த இடத்திற்கு அருகிலுள்ள குளத்து மண்ணை எடுத்து, அம்மக்களின் நோய்தீரும்படி செய்துள்ளார். சுவாமியின் அருமை பெருமைகளைக் கேள்விப்பட்டு, திரு. சுப்ரமணியம் கணபதிப்பிள்ளை என்பவர், சுவாமியின் அன்பராக விளங்கினார். அவ்விடத்திலே ஆலயம் ஒன்றை அமைக்கவேண்டும் என்ற பெருவிருப்புடையவராக இவர் காணப்பட்டபோதிலும், பொருள்வசதியின்றி வருத்தப்பட்டார். இவரது எண்ணத்தை அறிந்துகொண்ட சுவாமிகள், அவரை அழைத்து "கோயில் அமையும் கவலைப்படாதே" எனக் கூறி, அருகில் தூர்ந்து காணப்பட்ட குளத்தைக் காட்டி, "இக்குளத்தை தூரெடுத்து நன்னிலைப்படுத்து பணம் கிடைக்கும்" என அருள்வாக்களித்தார். சித்தர்களின் வாக்கு பொய்த்ததில்லை என்பதை சமய வரலாறு பல சந்தர்ப்பங்களைக் காட்டி கோடிட்டுள்ளது. சுவாமியின் வாக்கும் பொய்க்வில்லை.

சுவாமியின் திருவாக்கை கருத்திற்கொண்ட திரு.சுப்ரமணியம் கணபதிப்பிள்ளை அவர்கள், குளத்தைத் தூர்எடுத்து ஆலயத்தை அமைக்கவும் எண்ணங்கொண்டார். அப்பொழுது அவரை அழைத்த சுவாமிகள், "எல்லா உயிர்க்கும் தலைவனாக விளங்கும் பசுபதியின் பெயரை, இங்கு எழுந்தருளப்போகும் இறைவனுக்குச் சூட்டும்படி கேட்டுக் கொண்டார். சிலகாலம் அங்கு வாழ்ந்த சுவாமிகள் சமாதியடைந்தார். சுவாமிகளது சமாதி இவ்வாலயத்திலே அமைந்துள்ளது. இவ்வாறான செவிவழி வரலாற்றின் அடிப்படையிலேயே, இவ்வாலயம் அமைந்த வரலாறு காணப்படுவதோடு, கோயிலின் பெயர்க் காரணமும் அமைந்துள்ளது.

சிவபெருமானின் மூர்த்திபேதங்கள் அறுபத்தி நான்கெனக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் பசுபதிமூர்த்தியும் ஒன்றாகும். இப்பெயரில் அமைந்த திருவுருவ வழிபாடு அருகியே காணப்படுகின்றது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள பெரும்பாலான சிவன் கோயில்களில், அறுபத்துநான்கு மூர்த்தங்களுள் இலிங்கம், இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பைரவர், வீரபத்திரர், நிருத்தமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, ஆகிய ஒன்பது மூர்த்திகளை வழிபடுவதே சாதாரண வழக்காகக் காணப்படுகின்றது. சுவாமிகள் தன்னுடன் வரும்பொழுது கொண்டுவந்திருந்த வீரபத்திரர் திருவுருவமும் சிவனின் அறுபத்து நான்கு பேதங்களுள் ஒன்றாகக் காணப்பட்டமை, சுவாமிகள் சிவவழிபாட்டில் கொண்ட ஈடுபாட்டை எடுத்தியம்புகின்றது.

இக்காரணத்தினாலேயே தான் தங்கியிருந்த இடத்திலே பசுபதீஸ்வரர் கோயிலை நிறுவும்படி கேட்டுள்ளார். சுவாமிகளின் அருள்வாக்கிற்கமையை குளத்தைத் தூரெடுத்து அந்தத் திருப்பணியை திரு. சுப்ரமணியம் கணபதிப்பிள்ளை அவர்கள் நிறைவேற்றினார்கள். இதனைத் தொடர்ந்து கோயில் அமைக்கப்பட்டு, அதன் பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டதோடு, பல வழிகளிலும் இக்கோயில் வளர்ச்சி பெற்றுக் காணப்பட்டது. 1814 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திரு சுப்ரமணியம் கணபதிப்பிள்ளை அவர்களாலேயே இக்கோயிலின் நிர்வாகம் நடைபெற்றுள்ளது.

*தொடரும்...*




*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 45)*

## கல்கியின் பொன்னியின் செல்வன்

# வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

பின்னர் தாங்கள் வைகை நதித் தீவில் பகைவனைத் (பாண்டிய மன்னன்) தேடி அலைந்த போது பகைவன் ஒழிந்திருந்த இடத்தை மரத்தினுள் மீது ஒழிந்திருந்து சொன்ன குரல் தான் இது 'அது நான் தான் நான் வளர்த்த சகோதரி பளுவூர் இளையராணி நந்தினியின் தீராத கோபத்திற்கு ஆளாக விரும்பலில்லை அதனால் நான் வெளிவரவில்லை' என்றான். ஆதித்தர் மிருந்த கோபத்துடன் 'உன்னையும் முதல் மந்திரியையும் தேசப் பிரஷ்டம் செய்ய ஏற்பாடு செய்வேன்' என்றார். தஞ்சையில் இருந்து வந்து கடம்பூர் மாளிகையின் அந்தப் புரத்தில் ஒரு அறையில் நந்தினி படுத்திருந்தாள் அவள் உள்ளம் உத்வேகத்துடன் சிந்தித்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயம் மணிமேகலை 'தேவி' என்று அழைத்ததபடி அங்கு வந்தாள். வணக்கம் செலுத்தி நின்றாள். நந்தினியும் அன்போடு உரையாடினாள். மணிமேகலை நந்தினியிடம் 'தங்களைப் போன்ற அழகியை நான் என்றும் கண்டதில்லை.' என்றாள். அதற்கு நந்தினி 'நீயும் மோகம் கொண்டாயா? என்னை விடு உனக்கு மதுராந்ததேவர் ஆதித்தகரிகாலர் இவர்களில் உன் மனதுக்கு யாரைப் பிடிக்கும்' என்று கேட்டாள். 'எனக்கு இரண்டு பேரையும் பிடிக்கவில்லை நான் ஆசை வைத்திருக்கும் என் நாயகன் பற்றி உங்களுக்கு சொல்லுகிறேன் அவர் முகம் என்னை கனவிலும் தொல்லை செய்கிறது இன்றும் நான் அவரைப் பார்த்தேன். என் தமையன் கந்தமாறன் அவரைப் பற்றி அடிக்கடி சொல்லியிருந்தார். நான்கு மாதத்திற்கு முன் அவரை முதலில் பார்த்தேன். அதன் பின் அவரை கனவிலும் நினைவிலும் பார்த்துக் கொண்டேயிருந்தேன். அவன் என் உள்ளத்தில் குடி கொண்டு விட்டான். பின்னர் என் தமையனை பின்னால் இருந்து முதுகில் குத்தி காயப்படுத்தி தப்பி ஓடியபின் அவரை மறந்து விட எண்ணினேன் என் தமையனும் அவரை மறக்கக் கட்டாயப்படுத்தினான். என் மனம் திகைத்துப் போய் இருந்தது என் தமையனின் எதிரியிடம் நான் எப்படி அன்பு செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்தேன் நேற்று திடீர் என்று அவரைப் பார்த்தேன் எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை அவரிடம் என் தமையனைப் பின்னால் இருந்து குத்தியதைப் பற்றிக் கோபத்துடன் கேட்டேன் அவர் அதை மறுத்துவிட்டார். நடந்ததை விளக்கமாகச் சொன்னார் மீண்டும் அவர் என் இதயத்தில் சிங்காசனம் ஏறிவிட்டார். ஆனால் எனக்கு இது கனவா நினைவா எதுவுமே புரியவில்லை நான் அவரை மணக்க விரும்புகிறேன்' என்று நாணத்துடன் கூறினாள் மணிமேகலை. அதற்கு நந்தினி 'அவர் என்றால் யார் பெண்ணாகப் பிறந்தால் ஒரு ஆண்பிள்ளையை மணந்துதான் தீர வேண்டும் இது உன் பெற்றோருக்கும் தமையனுக்கும் மன அமைதி தரும் ஆனால் எமக்கு அமைதி தர நாம் விரும்பியவரைத் தெரிந்து கொள்ள வேண்டும் வரும் இன்பங்களையும் துன்பங்களையும் பகிர்ந்து கொண்டு திடமாக வாழ வேண்டும் இந்த விடயமாக முடிவு எடுக்கவே என்னை உன் தமையன் இங்கு முக்கியமாக வரச் சொன்னான். இன்னும் சற்று நேரத்தில் கரிகாலரும் உன் தமையனும் வந்து விடுவார்கள். உன் விருப்பத்தை அறிந்து சொல்வதாக வாக்கு கொடுத்திருக்கிறேன். அதனால் உன் விருப்பத்தை சொல் நீ என்னை நெடுங்காலம் பழகிய தோழி போல் நினைத்தல்லவா யாவற்றையும் கூறினாய். நானும் உன்னோடு அப்படி பாசம் வைக்கத் தோன்றுகிறது. என்னை தேவி என்றோ இளவரசி என்றோ அழைக்காதே அக்கா என்று சொல்' என்றாள் நந்தினி. அதற்கு 'அக்கா நான் இன்று நடந்தவை கனவா நினைவா என்று புரியவில்லை என்றேன் அது நியாயமானால் அவர் இந்த மாளிகையில் எங்கோ ஒழித்து இருக்க வேண்டும் அல்லது தப்பிச் செல்ல முயன்றிருக்க வேண்டும்' என்றாள். அப்பொழுது நந்தினி சிந்தனையில் ஆழ்ந்தாள். நான் கடம்பூர் மாளிகையின் வாசல் வந்த போது அந்த மாளிகையில் சற்றுத் தூரத்தில் அடர்ந்த மரங்களுக்கு இடையே அவள் பார்த்த இரு முகங்கள் ஞாபகம் வந்தது அவர்களைப் பிடிக்க குதிரை ஆட்களை ஏவி விட்டிருந்தார்கள் என்பதையும் அறிந்து கொண்டாள். அவர்கள் இருவரையும் பிடித்து இருக்க வேண்டும் அங்கே அடைத்து வைக்கப்பட்டிருப்பார்கள் என்றாள் பின்னர் இதைப் பற்றி உன் தகப்பனாரிடம் சொன்னாயா என்று கேட்க மணிமேகலையும் 'இல்லை என் தமையனாரிடம் சொல்ல வேண்டாம் என எண்ணுகிறேன்' என்றாள். அப்படியானால் நீ உன் மனதில் சிறை வைத்திருப்பது வாணர் குலத்து வந்தியத்தேவனையா? என்று கேட்க மணிமேகலையும் 'ஆம் அக்கா எப்படி சரியாக ஊகித்து சொல்ல முடிகிறது' என்று கேட்டாள்.

அப்பொழுது பணிப் பெண் சந்திரமதி அங்கு வந்தாள். மணிமேகலையைப் பார்த்து 'உன் தமையனார் வீர நாராயண ஏரியைத் தாண்டி வந்து விட்டாராம் விருந்தினர்களையும் அழைத்து வந்து கொண்டிருக்கிறார்.' என்ற செய்தியைத் தெரிவித்தாள். கடம்பூர் மாளிகையின் முன் வாசல் அன்று மாலை அற்புதமாக காட்சி அளித்தது. பெரும் திரளான மக்கள் வீரத் தமிழகத்தின் மகா வீரன் வீரபாண்டியன் தலை கொண்ட ஆதித்தகரிகால சோழரைப் பார்க்க நெருங்கி அடைத்தபடி நின்றார்கள். ஆதித்தகரிகாலர் வீரப் புகழ் நாடெங்கும் பரவியிருந்தது. அதாவது பன்னிரண்டாம் வயதில் போர்க்களம் புகுந்து கையில் கத்தி எடுத்து பகைவர்கள் பலரை வெட்டி வீழ்த்தியவர். சேவூர் போர்க்களத்தில் பாண்டியப் படையை முறியடித்து வீரபாண்டியனை ஓடி ஒழியச் செய்தவன். பத்தொன்பதாம் பிராயத்தில் அவனின் படைகளை அழித்து அவன் ஒழிந்திருந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து அவன் தலையை வெட்டிக் கொண்டு வந்த வீராதி வீரர். இவனைப் பார்க்க திரள் திரளாக மக்கள் திரண்டு கொண்டு இருந்தார்கள் திடீர் என்று கந்தமாறன் தன் குதிரையை வெகு வேகமாகச் செலுத்தி வாசலில் நுழைந்து கீழே குதித்தான். அங்கு நின்ற தன் தந்தையையும் பெரிய பழுவேட்டரையரையும் பார்த்து 'இளவரசர் வருகிறார் அவர் சித்தம் கலங்கிக் கிடக்கிறது கோபம் வருகிறது என்று எச்சரிக்கை செய்யவே வந்தேன்' என்றான். அரண்மனையின் மேல் மாடியில் பெண்கள் நிற்பதைக் கண்டு மேலே சென்றான். பழுவூர் ராணியிடம் சென்றான். 'தேவி தங்கள் விருப்பத்தை நிறைவேற்றினேன். இளவரசரை அழைத்து வந்துள்ளேன் இதோ வந்துகொண்டிருக்கிறார். அவர் மதம் பிடித்த யானை போல் இருக்கிறார். அவரை எப்படி சமாளிப்பது என்று தெரியவில்லை' என்றான். அதைக் கேட்ட நந்தினி 'உன் தங்கையின் கண்களே போதும். இவருடன் யார் யார் வருகிறார்கள் என்று கேட்க, பார்திபேந்திரப் பல்லவனும் வந்தியத்தேவனும் வருகிறார்கள்' என்றான் கந்தமாறன். அதைக் கேட்டு மணிமேகலை 'அண்ணா உன்னை பின்னால் இருந்து குத்திய பகைவனை ஏன் இங்கு அழைத்து வருகிறாய்?' என்று கேட்க கந்தமாறனும் 'இளவரசர் முகத்துக்காக பார்க்க வேண்டியுள்ளது' என்று கூறிவிட்டு கோட்டை வாசல் பக்கம் போனான் அந்த நேரம் மூன்று குதிரைகளும் வாசல் முன்வந்து நின்றது இருபது பேரிகைகள், இருநூறு கொம்புகள், முன்னூறு தாரைகள், ஐந்நூறு தப்பட்டைகள் சேர்ந்து பெரிய முழக்கமாக எழுந்தது சனங்களின் பேரிரைச்சல் அடங்காது கட்டியம் கூறப்பட்டது. 'சூரிய வம்சத்தில் பிறந்த மனு மாந்தரோ அவ்வம்சத்தில் புறாவிற்கு சதை அறுத்துக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்திக்குப் பின் தோன்றிய இராஜ கேசரி. இவர் புதல்வர் பரகேசரி பசுவிற்கு நியாயம் வழங்கிய தன் புதல்வனை பலி கொடுத்த மனுநீதி சோழன் இமய மலையில் புலி இலட்சினை பொறித்த கரிகாலபெருவிளத்தான் நலங்கிள்ளி, நெருங்கிள்ளி பெருநற்கிள்ளி, குளமுற்றத்திற்கு துஞ்சிய கிள்ளி வளவன், குராப்பள்ளி துஞ்சிய கிள்ளி வளவளவன், எழுபத்திரண்டு சிவாலயம் எடுத்த கோப்பெருஞ் சோழர் இவர்கள் வழிவந்த தொண்ணுற்றாறு புண் சுமந்த பழையாறை விஜயாலயச் சோழர், இவர் குமாரர் எண்பத்திரண்டு சிவாலயம் எடுப்பித்த ஆதித்த சோழர், இவருடைய குமாரர் மதுரையும் ஈழமும் கொண்டு தில்லை சிதம்பரத்தில் பொன் மண்டபம் கட்டிய பராந்தக சோழ சக்கரவர்த்தி, இவர் குமாரர் இரட்டை மண்டலத்துக் கன்னர தேவன், படைகளை முறியடித்து ஆற்றூர்த் துஞ்சிய வீராதி வீரன் அரிஞ்சய தேவர், இவர் குமாரர் ஈழம் முதல் சிட்புலி நாடு வரை ஒரு குடை நிழலில் ஆளும் பழையாறை பராந்தக சுந்தர சோழ சக்கரவர்த்தி,



அவருடைய மூத்த குமாரன் கோப்பெரு மகனார் வட திசை மாதடை நாயகர் யுவாரஜ் சக்கரவர்த்தி வீர பாண்டிய தலை கொண்ட ஆதித்தகரிகாலச் சோழர் விஜயம் செய்கிறார் பராக்! பராக்!' என்றது. இதைத் தொடர்ந்து இன்னுமொரு கட்டடியக்காரன் குரல் எழுந்தது. 'கொல்லி மலை மன்னன் ஒரே அம்பில் சிங்கத்தையும், கரடியையும், மானையும், பன்றியையும் சேர்த்து துளைத்த வீரன்! வல்வில் ஓரி அவனுடைய பரம்பரையில் வழித் தோன்றிய ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட வீர கம்பீர சம்புவரையர் சோழ சக்கரவர்த்தி குலத்திற்கு என்றும் துணைவன் வீர நாராயண ஏரியின் காவலர் ஐயாயிரம் வீரப் படையின் தடை நாயகன் தன் அரண்மனையில் எழுந்தருளுமாறு கோப்பெருமகனார் ஆதித்தகரிகாலனும், சோழரை மனமொழி மெய்களால் உவந்து வரவேற்கிறேன்! என்று கூறினான். அப்பொழுதே மேல் மாடியில் நின்ற அரண்மனைப் பெண்கள் மலர்கள் பொழிந்து வரவேற்றனர் வந்த விருந்தாளிகளும் உட்புகுந்தார்கள் வாசல் கதவுகள் படார் படார் என்று பூட்டப்பட்டது. சனங்கள் பெரும் கூச்சல் போட்டனர் உடனே கரிகாலர் மேல் மாடிக்குச் சென்றார். செல்லும் போது மேல் மாடியில் இருந்து பெண்கள் கீழே இறங்கிவந்தார்கள். கந்தமாறன் அவர்களை அறிமுகம் செய்தான் பெண்களுக்கு வழிவிட்டுக் கொடுத்தார்கள் அப்பொழுது பழுவூர்ராணி வந்தாள் என் பாட்டியும் வந்திருக்கிறார் சந்தோஷம்' என்றார். 'மணிமேகலைக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்திருக்கிறோம் சித்திரத்தில் எழுதிய கந்தர்வ கன்னியைப் போல் இருக்கிறாள்' என்றார்.

இவ்வேளை வந்தியத்தேவனும் கூட இருந்தான். மணிமேகலை வந்தியத்தேவனைப் பார்த்து விட்டு வெட்கத்துடன் இறங்கிச் சென்றாள். பின்னர் கரிகாலர் மேல் மாடத்தின் முகப்பிற்கு சென்று கட்டியக் காரனை அழைத்து சில செய்திகளை மக்களுக்கு சொல்லச் சொல்லி அனுப்பினான். அதாவது தான் இங்கு ஒரு வாரம் பத்து நாட்கள் வரை தங்குவதாகவும், சுற்றுப்புற உலாக்களுக்கு விஜயம் செய்வதாகவும், மக்களை நேரில் கண்டு அவர்களுடைய குறைகளை கேட்டு அறிந்து கொள்வதகாகவும் சொல்லச் சொன்னான். இதனால் மக்கள் பெரு மகிழ்ச்சியுடன் அவரை வாழ்த்தி கலைந்து சென்றனர். பின்னர் கந்தமாறன் முன்னால் போக ஆதித்தகரிகாலருடன் வந்தியத்தேவனும், பாத்திபேந்திரனும் பின் தொடர்ந்து மாளிகையைச் சுற்றிப் பார்த்தனர். அப்பொழுது சம்புவரையர் ஆதித்தகரிகாலரை நோக்கி 'எல்லா விதமான ஏற்பாடுகளும் உண்டு தங்களுக்கு எந்தவிதமான ஆபத்துக்களும் வருவதற்கு நான் விடப் போவதில்லை மகிழ்ச்சியுடன் பொழுதைக் கழிக்கலாம்' என்றார். அதற்கு 'ஆமாம் பகலில் வேட்டையாடுவதில் கழிப்பேன் இரவில் குரவைக் கூத்து பார்த்து மகிழ்வேன் நான் தூங்கி மூன்று வருடங்கள் ஆகிவிட்டது பகலில் தூங்குவதில்லை இரவில் தூங்குவதுமில்லை எனக்கு தீங்கு செய்ய யாருக்கு தைரியம் உண்டு' என்று கூறிவிட்டு சிரித்தான் ஆதித்தகரிகாலன். இதைக் கேட்ட சம்புவரையரும் பழுவேட்டரையரும் 'தேவையில்லாமல் தீங்கை நாம் விலைக்கு வாங்கிவிட்டோம் நடப்பது நடக்கட்டும்' என்றார். பழுவேட்டரையரிடம் 'என்ன தாத்தா தங்கள் ராணி மூடுபல்லக்கில் வந்தாளா அல்லது என் சித்தப்பா மதுராந்தகர் இரகசியமாக போவதற்கு மட்டுமா அந்த மூடுபல்லக்கு' என்று சிரித்தான். வந்தியத்தேவன் 'நான் தவறு செய்து விட்டேன் இந்த வெறி பிடித்த மனிதனிடம் வீணாக எல்லா விடயங்களையும் சொல்லிவிட்டேன். இவர் எல்லாவற்றையும் பகிரங்கப்படுத்துகிறாரே' என்றான். ஆதித்தகரிகாலரின் பேச்சால் எல்லோரும் மனச் சோர்வுடன் கலைந்து சென்றனர். பின்னர் தங்களுக்கு ஆயத்தம் செய்த இடங்களில் தங்கினார்கள். பூங்குழலியும் சேந்தன் அமுதனும் படகில் இருந்த வேளை ஊமை ராணி ஒரு மரத்தடியில் நின்றதை பூங்குழலி கண்டாள். சேந்தன் அமுதன் தன்னுடன் இருப்பதால் அவளால் இங்கு வரமுடியாது வேற்று மனிதரைக் கண்டாலே ஊமைராணி ஓட்டம் பிடிப்பாள். என்ன செய்வது என்று எண்ணும்போதே ஊமைராணி ஓட்டம்பிடித்தாள் பூங்குழலியும் தொடர்ந்து ஓடினாள் சேந்தன் அமுதனும் பூங்குழலியைப் பின் தொடர்ந்தான். ஊமைராணி மறைந்து கொண்டாள். அப்போது சேந்தன் அமுதன் 'யார் இது ஏன் உன்னைக் கண்டு பயந்து ஓடுகிறாள்' என்று கேட்டான். பூங்குழலியும் 'என்னைக் கண்டு அல்ல உன்னைக் கண்டுதான் இவர் உன் அத்தை இறந்து போனதாக நீ எண்ணும் உன் அத்தை அவருக்கு நீ யார் என்று தெரியாது சரி தேடிப் பார்க்கிறேன். அவர் பொன்னியின் செல்வரைப் பற்றி தெரிந்து கொள்ளவே இங்கு வந்திருக்கிறார் நானும் அவரிடம் சில விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் அன்று கோடிக் கரையில் பழுவூர் ராணியைப் பார்த்தேன். அவர்கள் முகத் தோற்றத்தில் ஒற்றுமையைக் கண்டு திகைப்படைந்தேன் அத்தையிடம் அதைப் பற்றி கேட்க வேண்டும்' என்று சொல்லிக் கொண்டு இருந்தபோது ஊமை ராணியைக் கண்டாள். உடனே சமிக்ஞை செய்தாள் ஊமைராணி ஓடவில்லை பூங்குழலி சேந்தன் அமுதனிடம் 'நான் உன்னுடன் தஞ்சை வரலாம் என்று எண்ணினேன் ஆனால் என் அத்தை நாகபட்டினம் சென்று இளவரசரைப் பார்க்க விரும்புகிறார் அவரை அழைத்து போக விரும்புகிறேன் நீ உன் மாமா முதலியோரிடம் விடை பெற்று செல்' என்றாள். அவ்வேளை பூங்குழலியின் அண்ணி ராக்கம்மா சில மனிதர்களிடம் பேசிக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்த பூங்குழலி 'ஓ பாண்டிய நாட்டு ஒற்றர்கள் போல இவரிற்கு பணத்தாசை அதனால் அவர்களுக்கு உதவுகிறாள்' என்று எண்ணிக் கொண்டாள். அமுதனிடமும் அண்ணி பற்றி சொல்லியிருந்தாள். அவள் அண்ணி பூங்குழலியைக் கண்டு ஓடி வந்தாள். 'நீ எங்கே போனாய் அதுவும் அமுதனையும் அழைத்துக் கொண்டு எங்கே போனாய் உன் அத்தையைக் கண்டாயா உன்னைத் தேடினாள்' என்றாள். 'நான் அவரைக் காணவில்லை' என்று பதில் அளித்தாள் பூங்குழலி. சிறிது நேரத்தில் தன் படகை நாகபட்டினம் நோக்கி புறப்பட ஆயத்தம் செய்தாள் ஊமை ராணியும் அங்கே வந்தாள். படகு புறப்பட பூங்குழலியின் மனம் கவலையால் நிறைந்தது. 'நான் என் அத்தையை அழைத்துச் செல்கிறேன் என்னால் இளவரசர் இருக்கும் இடத்தை பகைவர்கள் கண்டு பிடித்தால் அது எத்தனை அபாயம் சேந்தன் அமுதனையும் ஊருக்குப் போ என்று துரத்திவிட்டேன் என் தந்தை தியாக விடங்கர் இராச்சியத்தில் ஏதோ சதி நடக்கிறது. நீ அதில் அகப்பட்டுக் கொள்ளாதே' என்று எச்சரிக்கை செய்திருக்கிறார். அண்ணியின் இரகசிய நடவடிக்கை ஒரு புறம் என்று மனம் புழுங்கினாள். இச்சமயம் மான் ஒன்று அம்பு எய்யப்பட்டதால் விழுந்தது. இதைக் கண்ட ஊமைராணி படகில் இருந்து இறங்கி வந்து அந்த மானை தூக்கிக் கொண்டாள்.

*(தொடரும்...)*

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

# அன்பின் தொனி - 643

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**பரிசுத்தம் அடைவதற்கான வழி - ஞானஸ்நானம் அல்லது திருமுழுக்கு**

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். இத்திருவசனத்தின்படி ஒருவன் இரட்சிக்கப்பட கர்த்தர்மேல் விசுவாசம் வைத்தால் போதாது, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது அவசியம். மேலும் நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று எழுதியிருக்கிறபடி, மனந்திரும்பி பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொண்டவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டுமென்பது உண்மை. தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதே சரியான முறை என்பதை பரிசுத்த வேதாகமம் விளக்கிக் காட்டுகிறது. ஞானஸ் நானம் பெறுகிறவர் தண்ணீரில் மூழ்கும்போது கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டதாகவும், தண்ணீரை விட்டு எழும்போது கிறிஸ்துவுடன் எழுந்திருப்பதாகவும் விசுவாசிக்கிறோம். கிறிஸ்துவோடுகூட மரித்தேன், கிறிஸ்து வோடுகூட அடக்கம் பண்ணப்பட்டேன், கிறிஸ்துவோடுகூட உயிரோடு எழும்பினேன் என்பவைகளாகிய முக்கியமான ஆவிக்குரிய உண்மைகளை, ஞானஸ்நானம் என்னும் அடையாளச் செய்கையின் மூலம் வெளிப்படுத்துகிறோம்.

ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். - **கொலோசேயர் 2: 12**

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். - **மாற்கு 16: 16**

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். - **அப்போஸ்தலர் 2: 38**

**ஞானஸ்நானத்தின் பிரதிபலன்கள்**

- ஞானஸ்நானம் தேவனுடைய ஆலோசனைக்கும், கட்டளைக்கும் நம்மைக் கீழ்ப்படியச் செய்கிறது.

யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். - **லூக்கா 7: 29**

- ஞானஸ்நானத்தால் நாம் தேவ நீதியை நிறைவேற்றுகிறோம்.

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். - **மத்தேயு 3: 15**

- ஞானஸ்நானம் நம்மைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது.

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? - **ரோமர் 6: 3**

- ஞானஸ்நானத்தால் நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகிறோம்.

ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. - **கலாத்தியர் 3: 27**

- ஞானஸ்நானம் நாம் தேவனோடு செய்யும் உடன்படிக்கை.

அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக் கிறது. - **1 பேதுரு 3: 21**

- ஞானஸ்நானம் நாம் தேவனோடு செய்யும் உடன்படிக்கைக்குச் சாட்சி.

பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது. - **1 யோவான். 5: 8**

- ஞானஸ்நானத்தால் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம்.

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். - **யோவான் 3: 5**

- ஞானஸ்நானம் நம்மை உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோடு ஒன்றாக இணைக்கிறது.

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ள வர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். - **ரோமர் 6: 4-5**

*தொடரும்...*


MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS CRPLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# மரண அறிவித்தல்

மண்ணில்

11
-
10
-
1949



விண்ணில்

23
-
02
-
2022

# திருமதி கமலாதேவி சந்திரபாலன்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை வதிவிடமாகவும், தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி கமலாதேவி - சந்திரபாலன் 23/2/2022 அன்று இறைபதம் எய்தினார்.
அன்னார் சந்திரபாலன் (சங்கீதபூசணம்) அவர்களின் அன்பு மனைவியும்,
காலஞ்சென்றவர்களான செல்லையா - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும்,
காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - பராசக்தி தம்பதிகளின் அன்பு மருமகளும்,
கமலச்சந்திரன்(சுவிஸ்), கலையழகன்(சுவிஸ்), சந்திரிகா(கனடா), தேனுகா(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,
ஜெயகௌரி(சுவிஸ்), ராகினி(சுவிஸ்), ரவீந்திரகுமார்(கனடா), காலஞ்சென்ற சுதாகரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,
பாலசிங்கம்(சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சண்முகம், பரமேஸ்வரன்(சுவிஸ்), நாகேஸ்வரி(கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும்,
புஸ்பவதி(சுவிஸ்), விமலாதேவி(சுவிஸ்), கலைச்செல்வி(சுவிஸ்), சந்திரகுமார்(கனடா), ஆகியோரின் அன்பு மைத்துனியும்,
அட்ஷயன், கருணி, காருஷன், கார்ஸ்வினி, கார்ஸ்விகன், கஜீவன், யாசி, சுலக்ஷன், யோழன், சிஜானுகா, அபிஷா,
அஜிஸ், ஆகியோரின் அன்பு பேத்தியும், இதயராஜ், சங்கீதா, ரூபன், தீபன், நிஷாந்தன், மயூரன்,
ஜெனிவன், ஆகியோரின் அன்பு அத்தையும், சுஜீவனின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் சனிக்கிழமை 26/02/2022 அன்று 8911 Woodbine Avenue, Markham - Ont ல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home மலர்ச்சாலையில் பிற்பகல் 2.00 மணிமுதல் 5.00 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை 27/02/2022 காலை 7.00 மணிமுதல் 8.00 மணிவரை வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, 8.00 ய.அ தொடக்கம் 9.30 வரை ஈமக்கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனக்கிரியைகளுக்காக, Forest Lawn Crematorium 4570 Yonge Street, Toronto, Ontario என்ற முகவரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு 10.30 காலை மணிக்கு தகனம் செய்யப்படும்.

***இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.***

*தொடர்புகளுக்கு:*
சந்திரிகா: 647 406 1847
தேனுகா: 647 449 4168
சந்திரபாலன் (கணவர்): 647 534 0167
சந்திரன் (Swiss): 4179 672 2221
கலையழகன் (Swiss): 4177 522 6575








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்




உதயம் 1351 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 25, 2022

## ‘ஆன்மீகக் குரு’ மேல்மருவத்தூர் ‘அருள்மிகு அடிகளார்’ அவர்களின் 82வது அவதாரப் பெருவிழா



தமிழ்நாட்டின் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தை நிறுவி சக்தி வழிபாட்டின் பெருமைகளை உலகெங்கும் பரப்பி வருகின்ற ‘ஆன்மீகக் குரு’ அருள்மிகு அடிகளார் அவர்களின் 82வது அவதாரப் பெருவிழா எதிர்வரும் 03-03-2022 அன்று தமிழ்நாட்டின் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்திலும் மற்றும் உலகெங்கும் உள்ள வழிபாட்டு மன்றங்களிலும் நடைபெறும் என்ற செய்தியை கனடாவில் உள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அலயம் சார்பான சக்திகள் தெரிவித்துக்கொள்கின்றார்கள்

அடிகளாரின் அவதாரத் திருநாளை முன்னிட்டு திட்டமிட்டவண்ணம் தமிழ்நாட்டின் ஆலயத்தில் சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன.

## புலம்பெயர் தேசங்களில் உள்ள எமது உறவுகள் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பு செய்து வருகிறார்கள்

### பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்



கல்வி எமது இனத்தின் மிகப்பெரிய கொடை.இன்று உலகம் பூராகவும் கல்விக் கொடை பரந்து காணப்படுகின்றது. எமது மாணவர்கள் அதனை திறம்பட செய்து வருகின்றனர். புலம்பெயர் தேசங்களில் உள்ள எமது உறவுகள் வடக்கு கிழக்கில் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பு செய்து வருகிறார்கள்.என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வன்னி மண் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் “கல்விக்கு கரம் கொடுப்போம்“ எனும் தொனிப்பொருளில் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 38 பேருக்கு மடிக்கணினிகள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை (19) காலை 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் கலந்து கொண்டார்.

## கனடா – முன்னாள் தபால் தந்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவரின் ஞாபகார்த்தமாக கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டத்திற்கு 200 டாலர்கள் வழங்கப்பெற்றது

Toronto Voice Of Humanity



கனடாவில் கடந்த பல வருடங்களாக இயங்கிவரும் கனடா- முன்னாள் தபால் தந்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தில் நீண்ட கால அங்கத்தவராக விளங்கியவரும் யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் மத்திய தொலைத் தொடர்பு தலைமையகத்தில் பணியாற்றிய பின்னர் கப்பல் ஒன்றில் தொலைலத் தொடர்பு உத்தியோகத்தராகப் பணியாற்றியவரும் கனடாவில் பல ஆண்டுகள் வாழ்ந்தவருமான திரு ஹரிஹர சர்மா அவர்கள் அண்மையில் காலமானார்.

கனடாவில் இயங்கிவரும் முன்னாள் தபால் தந்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தீர்மானத்திற்கு அமைய மரணத்தைத் தழுவும் அங்கத்தவர்களின் ஞாபகார்த்தமாக மனித நேயப் பணிகளுக்கு நிதி அன்பளிப்பு செய்யும் வகையில் ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் மேற்படி யாழ்ப்பாண மாணவர்களிற்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டத்திற்கு 200 டாலர்களை சங்கத்தினர் வழங்கியுள்ளனர். சங்கத்தினருக்கு ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பினர் நன்றி தெரிவிக்கின்றனர்.

## எமது தாய் மண்ணில் இடம்பெறும் இந்த உயிர்காக்கும் நற்பணிக்கு நீங்களும் பங்களிக்கலாம் கனடா "நிவாரணம்" அமைப்பின் நிறுவனர் செந்தில் குமரன் வேண்டுகோள்




யாழ்ப்பாணம் மட்டுவில், சாவகச்சேரியை சேர்ந்தவரும் 21 வயதுடையவருமான. செல்வன் நிசாவுகேசன் என்னும் இளைஞர் அவசரமாக இருதய சத்திர சிகிச்சை செய்வதற்காக கொழும்பிலுள்ள லங்கா மருத்துவமனையில்அனுமதிக்க வேண்டிய கட்டாயம் காரணமாக கனடா செந்தில் குமரன் அவர்களின் “நிவாரணம்“ அமைப்பு வழமைபோல இந்த உயிர் காக்கும் பணிக்காக உதவிக் கரம் நீட்டியது.

அதனால் செல்வன் நிசாவுகேசனின் இருதய சத்திர சிகிச்சையும் வைத்தியசாலை பூரண வெற்றியோடு நடந்தேறியது. இந்த இளைஞனின் உயிரினை காக்க அதற்கான முழு செலவினையும் வழங்கிய கனடா திரு திருமதி சஜி நடா அவர்களுக்கு தாயக மக்களின் சார்பில் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம். இந்த இருதய சத்திர சிகிச்சைக்காக சுமார் 9 இலட்சம் இலங்கை ரூபாய்கள் வைத்தியசாலைக்கு செலுத்தப்பட்டுள்ளது.

(உள்ளே 13ம் பக்கத்தில் விபரமான செய்தி)




## கனடா வாழ் ரசிகர்களுக்காக யாழ் மண்ணிலிருந்து ஒரு திரைப்படம் ‘புத்திகெட்ட மனிதர் எல்லாம்’... காணத் தயாராகுங்கள்!

கனடா வாழ் ரசிகர்களுக்காக யாழ் மண்ணிலிருந்து ஒரு அற்புதமான திரைப்படம். ஏப்ரல் மாதம் 9ம் திகதி ஸ்காபுறோ நகரில் திரையிடப்படுகின்றது

(உள்ளே 15ம் பக்கத்தில் அறிவித்தலைப் பார்க்கவும்)

